பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

The Valampuri


ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 08 | வியாழக்கிழமை (24.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 217




நேற்று திருநெல்வேலி தபாற்கட்டைச் சந்திப் பகுதியில் அமைக்கப்பட்ட லெப்.செல்லக்கிளியின் நினைவுத் தூபியைத் திறக்கவிடாது இராணுவம் தடுத்து நிற்பதையும்;போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் மனிதஉரிமை ஆணைக் குழுவினர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

படங்கள்:பவன்

## லெப்.செல்லக்கிளியின் நினைவுத் தூபி திரைநீக்கம்

# திருநெல்வேலி தபாற்கட்டையில் இராணுவம்-பொதுமக்கள் முறுகல்

## பல மணிநேரம் களேபரம்

(யாழ்ப்பாணம்)

**ஈழவிடுதலைப் போரின் முதற்தாக்குதல் தளபதி லெப்டினன் செல்லக்கிளி அம்மானின் நினைவுத் தூபியை திரை நீக்கம் செய்யும் ஏற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொது மக்களுக்கும் அதனை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட படையினருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையினால் திருநெல்வேலி தபாற்கட்டைச் சந்தியில் நேற்றுப் பெரும்களேபரம் ஏற்பட்டது.**

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

1983-ம் ஆண்டு ஜுலை 23-ம் திகதி திருநெல்வேலி தபாற்கட்டைச் சந்தியில் இரா்ணுவ வாகனத் தொடர் அணி மீது தாக்குதல் தொடுத்து 13 இராணுவத்தினர் பலியான சம்பவத்தில் தாக்குதலை நிகழ்த்திய தளபதி செல்லக்கிளி அம்மானும் விழுப்புண் அடைந்து விரச்சாவடைந திருந்தார்.

இத்தாக்குதலையும் செல்லககிளி அம்மானின் இருபதாம் ஆண்டு நினைவு தினத்தையும் நினைவுகூரும் வகையில் தபாற்கட்டைச் சந்தியில் மக்கள் நினைவுத் தூபி ஒன்றை அமைத்து அதனை திரை நீக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளில் நேற்று நண்பகல் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு திடீரென வந்திறங்கிய பெருமளவான படையினர் அப் பணியைத் தடுத்து நிறுத்தியதுடன் நினைவுத் தூபியை தகரங்களால் மூடி மறைப்பை ஏற்படுத்தினர்.

அத்துடன் அப்பகுதியை விட்டு பொது மக்கள் அனைவரையும் விலகுமாறும் இல்லையேல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படும் என்றும் எச்சரிக்கை செய்தனர்.

(10ம் பக்கம் பார்க்க)

## துறையூர் மக்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் நேற்றுக் காலை வேலணை துறையூர் மீன் சந்தையில் நின்ற பொது மக்களை கண்டபடி ஏசி அச்சுறுத்தினார்கள் என்று துறையூர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் யாழ்.மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

இவர்களது அச்சுறுத்தலால் மக்கள் பீதியடைந்திருப்பதாகவும்.இது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்குமாறும் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ)

## இடைக்கால சபையை ஆராய முஸ்லிம் எம்.பிக்கள்குழு நியமனம்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசின் திட்ட வரைபு குறித்து ஆராய்வதற்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட உப குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம் பெற்ற வடக்குக் கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியக் கூட்டத்திலேயே இந்த உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த உப குழுவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசைச்சேர்ந்த பிரதி அமைச்சர் பசீர்சேவுதாவுத்.பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் ஸ்மையில் ஆகியோரும் தேசிய ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா,ஸ்சதீன் ஆகியோரும் அஷ்ரப காங்கிரஸ் சார்பாக வன்னிப்

(10ம் பக்கம் பார்க்க)

## பொங்குதமிழ் நிகழ்வு குறித்து பத்திரிகையாளர்களுக்கு விளக்கம்

### கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நடந்தது

(கொழும்பு)

வடபகுதியில் இடம் பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வு தொடர்பாக தென்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள தப்பபிப்பிராயங்களை நீக்கும் வகையில் நேற்று கொழும்பு நிப்பொன் ஹொட்டலில் பொங்கு தமிழ் ஏற்பாட்டாளர்காளால் பத்திரிகையாளர் சந்திப்பொன்று நடத்தப்பட்டது.

இச் சந்திப்பில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன், யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் எஸ்.சிதம்பரநாதன் மற்றும் யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளான எஸ்.சிறிதரன்,எஸ்.கிருஷ்ணவேணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொங்கு தமிழ் நிகழ்வு தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு

(10ம் பக்கம் பார்க்க)

## இடைக்கால சபைவரைபில் முரண்பாடு

# நாட்டு மக்களுக்காற்றும் உரையை ஜனாதிபதி சந்திரிகா ஒத்திவைத்தார்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகளுக்கும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை பற்றிய யோசனைகளுக்கும் இடையில் பெருமளவு வித்தியாசம் காணப்படுகிறது.

இதானல் இது தொடர்பான தெளிவான நிலைப்பாடு ஒன்றை அறிந்து கொள்ளும் வரை ஜனாதிபதி தாம் நாட்டு மக்களுக்காற்றும் உரையை ஒத்திவைத்துள்ளார்.

இவ்வாறு ஜனாதிபதியின் ஊடகப் பிரிவுப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

வடக்குக்-கிழக்குக்கான உத்தேச இடைக்கால நிர்வாக சபைதொடர்பாகவும் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் நேற்று நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ஆற்றவிருந்த உரை திடீரென பிற்போடப்பட்டமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை,ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இடைக்கால நிர்வாக சபை திட்டவரைபு பற்றி ஆராய முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் தலைமயில் 4பேர் கொண்ட குழு ஒனறை அமைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## அமெ.புலனாய்வின் ஆலோசனை

# அமைச்சர்களின் உரையாடல் ஒட்டுக் கேட்கப்படுகிறது

(கொழும்பு)

நாட்டில் உறுதியற்ற அரசியல் நிலைமை இருப்பதை முன்னிட்டு சில அமைச்சர்களினதும் எம்.பிக்களினதும் தொலைபேசிகளை ஒட்டுக் கேட்குமாறு அரசின் உயர் பீடம் பாதுகாப்புப் படையினரிடம் கேட்டுள்ளது.சில அமைச்சர்களின் தொலைபேசி உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டு அவை வாராந்தம் கொழும்பு கேம்பிரிட்ஜ் ரெரேசிலுள்ள புலானாய்வுப்பணியகத்தில் பணியாற்றும் அமெரிக்கரான புறூஸ் கொப்பனிடம் கையளிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மெரில் குணரத்தினவுக்கும்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாட்டைத் திறமையாக நிர்வகிக்க முடியாதவர்கள்

# வீட்டிற்குச் செல்வதே மேலானது

## அரசு மீது ஆத்திரத்தைக் கொட்டுகிறார் மகிந்த

(யாழ்ப்பாணம்)

''வற்'' வரிமூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினூடாக திறைசேரிக்குக் கிடைக்க விருந்த வருமானத்தில் துண்டுவிழுந்துள்ள 2 ஆயிரம் கோடி ரூபா நிதியை ஈடுசெய்வதற்கு, வேறு புதிய வரியொன்றை அறிமுகப்படுத்தல் அல்லது எதிர்காலத்தில் ஆரம்பிக்கத் திட்மிடப்பட்டிருந்த அபிவிருத்திப் பணிகளை இடைநிறுத்துதல் ஆகிய இவ்விரு வழிகளில் எந்தவொரு முறையைக் கையாணடாலும் இடையில் பாதிக்கப்படுவது அப்பாவிப்பொதுமக்களே. இது இந்நாட்டு மக்களுக்கு துரோகம் இழைக்கும் செயற்பாடாகவே அமையும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சபாநாயகரின் அனுமதியு டன் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு மகந்த ராஜபக்ஷ அங்கு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவிக்கையில்;

''வற் வரியால் துண்டு விழும் 2ஆயிரம் கோடி ரூபா நிதியை ஈடுசெய்ய புதிய வரி அறிமுகப்படுத்தப்படுமானால் மக்கள் மீது வீணாக பளுசுமத்தப்படும் நிலை ஏற்படும். உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் பலவீனமான செயற்பாட்டுக்கு மக்களைப் பலி யாக்க வேண்டாம் அரசாங்கம் இந்த வற்வரியை அறிமுகப்படுத்துவதற்கு முன் இவ்வாறான நிலை ஏற்படும் என்பதை முன் கூட்டியே அறிந்திருக்க வேண்டும். அதேவேளை இவ்வரி அறவீட்டுக்கான இயந்திர ஊடகத்தையும் அறிமுகப்படுத்தியிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவ்வாறான முன்னேற்பா டான செயற்பாடுகளைச் செய்வதை விட்டுவிட்டுதனது பலவீனமான முகா மைத்துவத்தை பொது மக்கள் மீது பொருளாதாரப் பளுவைச் சுமத்துவது முற்றிலும் தவறானது. அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். நாட்டை உரிய முறையில் நிர்வகிக்கும திறமை அரசாங்கத்துக்கு இல்லாவிட்டால் அப்பொறுப்பை அதற்குரிய இயலுமை உள்ளவர்களிடம் ஒப்படைத்து விட்டு வீட்டுக்குச் செல்லுமாறு அரசாங்கத்தை காரசாரமான முறையில் சாடியுள்ளார்.

(உ-18)

## விபத்தில் 26 பேர் படுகாயம்

(கொழும்பு)

மாத்தளை பூந்தயாங்கொடவில் நேற்று நடைபெற்ற வாகன விபத்தில் 26 பேர் படுகாயமடைந்த நிலையில் மாத்தளை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தளையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றும் கண்டியில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்தாக கூறப்படுகிறது.

(உ-10)

## வதிவிடப் பாசறை நிகழ்வு இன்று

(கொழும்புத்துறை)

திருமறைக்கலா மன்றத்தினால் ''படைப்பாக்கமும் ஆளுமை விருத்தியும்'' என்னும் மையப்பொருளில் வதிவிடப்பாசறை நிகழ்வு கடந்த 19ம் திகதி தொடக்கம் நாளை வரை நடைபெறவுள்ளது.

இவ்வதிவிடப்பாசறை நிகழ்வில் கொழும்பு, வவுனியா, திருகோணமலை, மன்னார், புத்தளம், கப்புத்தளை ஆகியவிடங்களில் தெரிவு செய்யப்பட்ட 40 பேருக்கு வதிவிடப் பயிற்சி வழங்கப்படுகிறது.

இப்பயிற்சிகள் ஈழத்தின் அனுபவம் மிக்க பல்துறை சார்ந்தவர்களால் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியை நிறைவு செய்யும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று கலா மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(இ-51,5)

## கரபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 48 வது ஆண்டு விழாவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்டு வரும் செற்றப் முறையிலான கரபந்தாட்டப் போட்டியில் இன்று பி.ப. 3.30 மணிக்கு மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகமும் எதிர் பண்ணாலை கணேசன் விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து 4.30 மணிக்கு ஆவரங்கால் நவோதயா விளையாட்டுக் கழகம் எதிர் கைதடி கிழக்கு நவபுரம் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

(உ-10)

## நாட்டின் அரசியல் புதிய பாதைக்கு திசைதிருப்பப்படும்– பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அரசியல் கலாசாரத்தை புதிய பாதையில் இட்டுச் செல்லும் நடவடிக்கைகளை அரசாங்கம் விரைவில் ஆரம்பிக்கும் என அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது; பாராளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் ஜனநாயக அரசியல் பின்னணியை உருவாக்குவதே அரசின் முக்கிய நோக்கமாகும்

இத்தகைய அரசியல் சூழ்நிலையை உருவாக்கும் போது அதற்கு எதிர்க்கட்சிகளும் பூரண ஆதரவு வழங்க வேண்டும்.

அத்துடன் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நேரடியாக கண்காணிப்பதற்காக 14 கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் எழுந்துள்ள பிரதான பிரச்சினைகளுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் தீர்வுகாண முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(உ-10)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் மா.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை கல்விக்கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.செல்லையாவும் சிறப்பு விருந்தினராக யாழ். மேற்கு போரூட் திட்ட இணைப்பாளர் ந.தவராஜகுமாரும் கௌரவ விருந்தினராக முன்னாள் அதிபர் வ.யோகானந்தசிவமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-8)

## மட்டு, அம்பாறை மாவட்டங்களில் நேற்று இயல்பு நிலை திரும்பியது

(கொழும்பு)

கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களாக அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலினையடுத்து இயல்பு நிலை பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, மற்றும் அம்பாறை மாவட்டங்கள் நேற்று முதல் மீண்டும் வழமைநிலைக்குத் திரும்பியுள்ளது.

மேற்படி இரு மாவட்டங்களிலும் நேற்று போக்குவரத்துச் சேவைகள் ஒழுங்காக நடைபெற்றதுடன் வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள், பாடசலைகள் யாவும் வழமை போல இயங்கின. ஆயினும் இன்றும் ஹர்த்தால் என ஒரு சிலவிசமிகளால் நேற்று பரப்பப்பட்ட வதந்தியால் பெரும்பாலான மாணவர்கள் பாடசாலைக்குச் சமூகமளிக்க வில்லையென அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன

(உ-10)

## உலக நீச்சல் போட்டி

## ஆஸி.யை பின்தள்ளிவிட்டு முன்னுக்கு வந்துள்ள ரஷ்யா

ஸ்பெயின் தலைநகரான பார்சிலோனாவில் நடைபெற்று வரும் உலக நீச்சல் சம்பியன் சிப்போட்டிகளில் பத்தாம் நாள் நிறைவின் போது 8 தங்கப்பதக்கங்கள், 4வெள்ளிப்பதக்கங்கள், 4 வெண்கலப்பதக்கங்கள் அடங்களாக 16 பதக்கங்களைப் பெற்று ரஷ்யா முன்நிலை வகிக்கின்றது.

இரண்டாம் இடத்தில் உள்ள சீனாவிற்கு 5 தங்கப்பதக்கங்களும் 4 வெள்ளிப் பதக்கங்களும் 5வெணகலப்பதக்கங்களும் கிடைத்துள்ளன. எவ்வாறாயினும் நீச்சல் போட்டிகளில் பிரசித்தி பெற்ற அவுஸ்ரேலியா மூன்றாம் இடத்தினையே இப்போதைக்கு பெறமுடிந்துள்ளது. இந் நாட்டு வீரர்கள் 5 தங்கப்பதக்கங்களையும், 4 வெள்ளிப்பதக்கங்களையும் 3 வெணகலப்பதக்கங்களையும் தமது நாட்டுக்காகபெற்றுக் கொடுத்தனர்.

இதேவேளை ஜேர்மனி, ஜக்கிய அமெரிக்கா, ஜப்பான், கனடா, இத்தாலி, உக்கிரேன், பிரான்ஸ், நெதர்லாந்து என்பன ஆகக்குறைந்தது ஒரு தங்கப்பதக்கத்தை பெற்று அடுத்த ஏழு ஸ்தான்ங்களையும் வகிக்கின்றன.

(உ-68)

## தென்னாபிரிக்கா-இந்தியா இடையிலான மூன்று நாள் சுற்றுப் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவு

இங்கிலாந்தின் அருன்ரல் நகரில் தென்னாபிரிக்காஅணிக்கும் இந்தியா ஏ அணிக்கும் இடையில் நடைபெற்ற மூன்று நாள் கிரிக்கற் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருக்கின்றது.

இந்திய ஏ அணி அதன் முதல் இனிங்சில் 319 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதில் யா..பர் 90 ஓட்டங்களையும், காம்பியா 64 ஓட்டங்களையும் பெற்றதுடன் சோன பொலக் 46ஓட்டங்களுக்கு 4 விக்கற்றுக்களை வீழ்த்தினார்,

தென்னாபிரிக்க அணி அதன் முதல் இனிங்சில் 463 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதில் றொடவ் 83 ஓட்டங்களையும் ஸ்மித், கிப்ஸ் இருவரும் தலா 79 ஓட்டங்களையும் கிறிஸ்ரன் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் சால்வீ 4 விக்கெற்றுக்களையும் பட்டானி 3விக்கெற்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய ஏ அணி அதன் இரண்டாவது இனிங்சில் 43 ஓவர்களில் மூன்று விக்கெற்றுகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. பட்டானி ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களையும் யா..பர் 54 ஓட்டங்களையும் பெற்றனர்

(உ-68)

## ஆம்ஸ்ரோங் முன்னணியில்

பிரன்ஸில் நடைபெறும் 159.5 கி.மீதூரம் கொண்ட ஸ்ருவர் டிபிரான்ஸ் 'சைக்கிள் ஓட்டப் போட்டியின் 15 ஆம் கட்டம் நேற்று முன்தினம் முடிவுற்றது. இப்போட்டித் தொடரில் தொடர்ந்து முன்னிலை வகித்து வரும் அமெரிக்க வீரர் ஆம்ஸ்ரோங் இப் 15 வது கட்டத்திலும் வெற்றி பெற்றுள்ளார். இவர் இப்போட்டிக்கான தூரத்தினை 4 மணித்தியாலங்கள் 29 நிமிடங்கள் 26 வினாடிகளில் ஓடி முடித்துள்ளார்.

ஸ்பெயின் வீரர் இ..பான்மகயோ இரண்டாவது இடத்தையும் ஜேர்மன் வீரர் ஜேம்ஸ் உல்ரிஸ் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.(உ-68)

## துடுப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நொதேன் விளையாட்டு கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் பரராஜ சிங்கம் ஞாபகார்தமாகவும் நடத்தபடும் பராவெற்றிக் கிண்ண மாபெரும் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பி.ப.3.15 மணிக்கு நல்லூர் செங்குந்தா விளையாட்டு மைதானத்தில் பைவ்ஸ்ரார்விளையாட்டுக்கழகம் எதிர் பசன் விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து4.45மணிக்கு ஞானவைரவர் விளையட்டுக் கழகம் எதிர் ஜெட் லைனர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(உ-10)


மின்னொளியில் மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

பூங்கனிச் சோலை

எதிர்வரும் 26,27-ம் திகதிகளில் (சனி,ஞாயிறு)காலை 8.30 மணி முதல் இரவு 8மணி வரை
எமது தாயகத்தில் எங்குமே பார்த்திராத புதிய மெருகுடன் பளிங்குக்கற்களினால்
புதிதாக வடிவமைக்கப்பட்ட தேர்,தண்ணீர்ச் சிந்திகள், மற்றும் பல.

உங்கள் சிறார்கள் பார்த்து மகிழ ஓர் அரிய சந்தர்ப்பம்

உயிருள்ள மிருகங்கள்: மான்கள்,குரங்கு,மயில்,பறவையினங்கள்.
செயற்கை மிருகங்களான: யானை,புலி,டைனோசர்,கழுகு
மற்றும் புதிய இனப் பூங்கன்றுகள்
யூக்கோசியா,பௌடர்பிறஸ்,பாங்கொக்கிச வதனியா,10இன சைபிறஸ்,வெரிகட், தொலட்,அப்ரிகட்,மண்டோரியா,கோண்..ாரி,சிங்ல வெதர்,தைத்ரிச்சா கோடிற் இந்தியா ஆகியவையும் காட்சிப் படுத்தப்பட உள்ளன.

சிங்கப்பூர் காட்சிகளுக்கு நிகராக அமைந்துள்ள இந்த
இயற்கை எழில் நிறைந்த காட்சிகளை கண்டு மகிழ
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முடமாவடி,
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி
T.P-2976

E-Mail:-Poonganisoolai@yahoo.com

# மாகாண மட்ட தமிழ்த்தின எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே அண்மையில் நடத்தப்பட்ட தமிழ் தின எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் முதல் 3 இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:-

**ஆக்கம-எழுத்து**

**பிரிவு I**

*1ம் இடம்:* ம.பிரசாந்தினி- தி/புனித பிரான்சிஸ் சவேரியார் மகாவித்தி.
*2ம் இடம்:* வ.ஹேசிகா- புனித ஜோன் பொஸ்கோ வித்தி.
*3ம் இடம்:* வெ.பாத்திமா ரிஸ்னா- கல்முனை/இமால் மரியான் கல்லூரி

**கட்டுரை வரைதல-கடிதம் எழுதல்**

**பிரிவு II**

*1ம் இடம்:* ர.ஆரணி- தி/புனித மரியாள் கல்லூரி
*2ம் இடம்:* ந.பவித்திரா- கிளி/புனித திரேசா கல்லூரி
*3ம் இடம்:* தி.காண்டீபன்- தி/மண்டூர் 13-விக்னேஸ்வரா இந்துக் கல்லூரி

**பிரிவு III**

*1ம் இடம்:* ஜே.கமியா- கல்முனை/அல்மனார் மத்திய கல்லூரி
*2ம் இடம்:* சி.சிவப்பிரகாந்- தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
*3ம் இடம்:* உ.அனுஷாந்- மட்/புனித மிக்கேல் கல்லூரி

**கட்டுரை வரைதல்- சுருக்கம் எழுதல்- கவிதை நயத்தல**

**பிரிவு IV**

*1ம் இடம்:* சி.இலக்கியா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
*2ம் இடம்:* சி.எமில்டா லோஜினி- மன்/ கருங்கண்டல் றோ.க.த.வித்தி.
*3ம் இடம்:* ச.அருட்செல்வம்- மட்/அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தி.

**தமிழியற் கட்டுரை வரைதல், திறனாய்வு செய்தல், இலக்கியச் சொற்பொழிவாக்கம், இலக்கண வினாக்களுக்கு விடை எழுதல்**

*1ம் இடம்:* தி.காயத்திரி- மகாஜனாக் கல்லூரி
*2ம் இடம்:* வி.அருணா- கிளி/ வட்டக்கச்சி மகாவித்தி.
*3ம் இடம்:* சி.சஜந்தினி- கல்முனை/அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி

**குறுநாடக ஆக்கம்**

**திறந்த போட்டி பிரிவு I**

*1ம் இடம்:* வி.விக்னேஸ்வரன்- வவு/புதுக்குளம் மகாவித்தி.
*2ம் இடம்:* எம்.றிஸ்னா- கல்முனை அல்மனார் மத்திய கல்லூரி
*3ம் இடம்:* வே.கஜேந்திரன்- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

**கவிதையாக்கம்**

**திறந்த போட்டி பிரிவுIV**

*1ம் இடம்:* ப.அருஸ்- தி/கிண்ணியா மத்திய கல்லூரி
*2ம் இடம்:* றா.அரங்கா- சங்கானை சிவப்பிரகாச வித்தி.
*3ம் இடம்:* றொ.றொபின்சா- மன்/ஆண்டான் குளம் றோ.க.த.க. பாடசாலை

**திறந்த போட்டி பிரிவு V**

*1ம் இடம்:* இ.சுதர்சனா- வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி
*2ம் இடம்:* இ.மோகனாம்பிகை- கிளி/பூநகரி மகாவித்தி.
*3ம் இடம்:* ப.சைந்தினி- சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**சிறுகதையாக்கம்**

**திறந்த போட்டி பிரிவு V**

*1ம் இடம்:* இ.ரிசிகாந்- தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
*2ம் இடம்:* லோ.கோபிநாத்- மட்/புனித மைக்கல் கல்லூரி
*3ம் இடம்:* எம்.தஸ்லீம்- கல்முனை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தி.

**திறந்த போட்டி பிரிவு IV**

*1ம் இடம்:* க.நிருத்திகா- கிளி/கிளிநொச்சி மகாவித்தி.
*2ம் இடம்:* ந.கண்ணதாஸ்- வேலணை சைவப்பிரகாச வித்தி
*3ம் இடம்:* க.திவ்யா-தி/புனித மரியாள் கல்லூரி

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து**

**விசேட பிரிவு I**

*1ம் இடம்:* ஜீ.வி.சமந்- தி/திஸ்ஸ மகாவித்தி.
*2ம் இடம்:* வி.கல்ப்பனா- வவு/பரக்குளம் மகாவித்தி.

**விசேட பிரிவு II**

*1ம் இடம்:* ஜி.பி.தீக்காயு நவந்தக- தி/திஸ்ஸ மகாவித்தி.
*2ம் இடம்:* பீ.மதுரிகா பிரியதர்சினி- வவு/பரக்குளம் மகாவித்தி. (உ-18)

# தெல்லிப்பழைக்கோட்ட சமூகக் கல்வி ஆக்கத்திறன் போட்டி முடிவுகள் வெளியாகின

(உடுவில்)

தெல்லிப்பழைக் கோட்டத்தினால் நடத்தப்பட்ட சமூகக் கல்வி ஆக்கத்திறன் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**பிரிவு 1**

**செயற்றிட்டமும் ஆய்வுக் குறிப்பு க்களும்**

த.பிரேமகாந்- மயிலிட்டி றோ.க.வி
து.துசந்தன்- மயிலிட்டி றோ.க.வி
ரா.ராஜ்பிரியா- கீரிமலை நகுலேஸ்வரா வி.
த.சிந்துஜா- மயிலிட்டி றோ.க.வி

**சித்திரம்/ஓவியம்/புகைப்படம்**

த.தவஜிலிம்-கட்டுவன்புலம் ம.வி
த.றஜிதா- கீரிமலை நகுலேஸ்வரா வி.
ச.பிரதாப்- தெல்லிப்பழை சைவப் பிரகாச வி.
கு.வசீகரன்- கீரிமலை நகுலேஸ்வரா வி.
தே.பிரதீப்ராஜ்குமார்- மயிலிட்டி றோ.க.வி

**செதுக்குவேலை/மாதிரியுரு**

ஆ.ரோகினி- மயிலிட்டி றோ.க.வி
ம.முரளிதரன்- கீரிமலை நகுலேஸ்வரா வி.
இ.ஸ்ரீதரன்- காங்கேசன்துறை ம.வி
ஐ.சிவரூபன்- தெல்லிப்பழை சைவப் பிரகாச வி.
இ.ரஜீவ்குமார்- மயிலிட்டி றோ.க.வி

**வரலாற்றுக் குறிப்புக்கள்**

நா.சசீகரன்- தெல்லிப்பழை சைவப் பிரகாச வி.
ஸ்ரீ.விதுசன்- கட்டுவன்புலம் ம.வி
ப.பிரியதர்சினி- கீரிமலை நகுலேஸ்வரா வி.

**தொழில்நுட்பம்**

ஜெ.ஜெனிவன்- மயிலிட்டி றோ.க.வி
அ.அன்ரனி- மயிலிட்டி றோ.க.வி
ஐ.மகிந்தன்- கட்டுவன்புலம் ம.வி
ச.கவாஸ்கர்- கட்டுவன்புலம் ம.வி
சு.தர்மசுதன்- கட்டுவன்புலம் ம.வி

**பிரிவு 2**

**செயற்றிட்டமும் ஆய்வுக் குறிப்புகளும்**

த.சுகன்சா- இளவாலை மெய்கண்டான்
சி.இந்திரன்- குட்டியப்புலம் அ.த.க.பா

**சித்திரம்/ஓவியம்/புகைப்படம்**

அ.யூட் அலெக்ஸ்- மயிலிட்டி வடக்கு கலைமகள்
மு.சிவசுதன்- அளவெட்டி அருணாசலம்
ர.பிரியதர்சன்- மயிலிட்டி வடக்கு கலைமகள்
பா.பகீரதன்- இளவாலை மெய்கண்டான்
பா.ராகவன்- குட்டியப்புலம் அ.த.க.பா

**செதுக்கல்/மாதிரியுரு**

யே.அருட் அன்றூசன்- குளமங்கால் றோ.க.
சி.சிறீகாந்- குளமங்கால் றோ.க.
உ.உ.தயசீலன்- குட்டியப்புலம் அ.த.க.பா
சி.அனோயா- அளவெட்டி அருணாசலம்
ச.கமல்ராஜ்- இளவாலை மெய்கண்டான்

**வரலாற்றுக் குறிப்புக்கள்**

செ.செந்தூரன்- குட்டியப்புலம் அ.த.க.பா
வை.ஜனார்த்தனன்- குட்டியப்புலம் அ.த.க.பா
அ.பிரதீபன்- குட்டியப்புலம் அ.த.க.பா

**தொழில்நுட்பம்**

சி.ரஜீபன்- இளவாலை மெய்கண்டான்
அ.வினோத்- இளவாலை மெய்கண்டான்
பொ.மதியழகன்- இளவாலை மெய்கண்டான்
க.ஜனாகரன்- அளவெட்டி அருணாசலம்
சி.சிவரஞ்சன்- குட்டியப்புலம் அ.த.க.பா

**பிரிவு 3**

**செயற்றிட்டமும் ஆய்வுக் குறிப்புக்களும்**

கு.திஜானா- மல்லாகம் ம.வி.

**சித்திரம்/ஓவியம்/புகைப்படம்**

சு.சஜந்தன்- அருணோதயாக் கல்லூரி
உ.துஷ்யந்தன்- அருணோதயாக் கல்லூரி
பா.விதுஷன்- அருணோதயாக் கல்லூரி

**செதுக்கல்/மாதிரியுரு**

த.கிஷாந்- மல்லாகம் ம.வி.
த.நிருஷா- மல்லாகம் ம.வி.
செ.பியற்றிஸ்- மல்லாகம் ம.வி.
ம.ஜோன்சன்- அருணோதயாக் கல்லூரி
வி.டேனிஸ்- அருணோதயா ம.வி.

**வரலாற்றுக் குறிப்புக்கள்**

சி.ரஜீனா- மல்லாகம் ம.வி.
வி.உறனிதா- அருணோதயாக் கல்லூரி
சி.செல்வறேசினி- மல்லாகம் ம.வி.
ம.சஜிந்தன்- அருணோதயாக் கல்லூரி
செ.பிரகாந்தன்- அருணோதயாக் கல்லூரி

**தொழில்நுட்பம்**

க.கலீபா- மல்லாகம் ம.வி.
கு.பிரகாத்- மல்லாகம் ம:வி.
சி.மணிமாறன்- மல்லாகம் ம.வி.
(உ-261)


## தரம் 11 மாணவர்களுக்கான

# கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஈழத்து எழுத்தாளர்
**அமரர் கணபதி கணேசன்** ஞாபகார்த்தமாக
(செம்பருத்தி பப்ளிகேஷன்ஸ் மலேசியா)

கட்டுரையின் தலைப்பு
**கல்வித்துறையில் கணனியின் பங்கு**

போட்டியின் விதிகள்:
தரம் பதினொன்றில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரை 200தொடக்கம் 250சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.07.2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**
**கட்டுரைப்போட்டி இல-6**

மாணவர் பெயர்: ..............................
பாடசாலை முகவரி: ..............................
..............................
கற்கும் தரம்: ..............................

உறுதிப்படுத்துகிறேன்

..............................
ஆசிரியர்.


# ஸ்ரீ.சு.க.அமைப்பாளரின் வீட்டின் மீது தாக்குதல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அங்குராங்கெத்த அமைப்பாளர் ஜயரட்ண திஸ்ஸநாயக்கவின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்களினால் கடந்த திங்களன்று இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த திங்களன்று இரவு 8.30 மணியளவில் ஆயுதம் தாங்கிய குழுவொன்று, அமைப்பாளரின் வீட்டின் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டுள்ளது.

எனினும் எவருக்கும் காயங்களோ, அன்றி சேதங்களோ ஏற்படவில்லை. இது தொடர்பான விசாரணைகளைஅங்குராங்கெத்த பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (தி)

## அறநெறிக் கல்வியில் தேறுவோருக்கு

# பல்கலைக்கழக அனுமதியில் மேலதிகமாக 10 புள்ளிகள்

(யாழ்ப்பாணம்)

அறநெறிப் பாடசாலைகளில் கல்வி பயின்று க.பொ.த (உ/த) வகுப்பு அறநெறிக் கல்விப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியின் போது மேலதிகமாகப் 10 புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

இப்புதிய நடைமுறைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதையடுத்தே இது தற்போது அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக இந்து கலாசார திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.தெய்வநாயகம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக எமது திணைக்களம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. 1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைகளை வளர்த்தெடுப்பதற்கு பல சிரமங்களை நாம் எதிர்நோக்கியிருந்தோம். ஆனால் தற்போது இப்பணிக்கு எமது திணைக்களம் முன்னுரிமை அளித்து வருகின்றது.

அதேவேளை, அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பளம், ஆசிரியர், மாணவர் ஆகியோருக்கான சீருடை, சத்துணவு, பாடசாலைத் தளபாடங்கள் ஆகியவற்றுக்கான கோரிக்கையொன்று அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நிதியுதவி வழங்குவதற்குரிய அமைச்சரவையின் அனுமதி விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, இந்து சமய அறநெறிக் கல்விக்குத் தனியான திணைக்களமொன்றை ஆரம்பிப்பதற்கு அமைச்சர் தி.மகேஸ்வரன் அமைச்சரவையின் அனுமதியைக் கோரியுள்ளதாகவும் தெரியவருகிறது.

அத்துடன், இதற்கான அனுமதி கிடைக்குமானால் அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சி மேன்மையுறும் எனவும் இதற்கான முன்னோடி நடவடிக்கையாகவே தற்போது பல்கலைக்கழக அனுமதிக்கு மேலதிகமான 10 புள்ளிகளும் வழங்கப்படவுள்ளது என்றார். (உ-18)

## வேலணையில் பொலிஸ்நிலையம்

(வேலணை)

வேலணைப் பகுதியில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துமுகமாக பொலிஸ் நிலையமொன்று அமைப்பதற்கு பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதேபோல் நயினாதீவு, மண்டைதீவு ஆகிய இடங்களிலும் பொலிஸ் நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-47)

## சூட்கேஸ் திருடர் இளைஞர்களிடம் பிடிபட்டார்

(உடுவில்)

வீட்டு உரிமையாளர்கள் பக்கத்து வீட்டில் இருந்தவேளை, மோட்டார் சைக்கிளில் வந்து இரு சூட்கேஸ்களைத் திருடிக்கொண்டு ஓடினார் என்று கூறப்படும் ஒருவர், அப்பகுதி இளைஞர்களால் துரத்திப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த 21ஆம் திகதி அச்சுவேலி செம்பாட்டுப் பகுதியில் சி.கந்தசாமி என்பவர் வீட்டில் இடம் பெற்றது.

இனந்தெரியாத நபர் ஒருவர் சூட்கேசுகளுடன் தமது வீட்டில் இருந்து வெளியேறி, அவசரமாக மோட்டார் சைக்கிளில் ஏறி ஓடியதைக் கண்ட வீட்டுப் பெண்மணி கூச்சலிடவே அப்பகுதி இளைஞர்கள் சைக்கிள்களிலும் ஓட்டோவிலும் துரத்திச் சென்று திருடனைப் பிடித்தனர். (பி-261)

## இன்னு ஒரு தகவல்

### காதல் பறவைகள்

பரிவு, பாசம் இவையெல்லாம் மனிதர்களுக்கு மட்டும் இருப்பதாக நினைக்கின்றீர்களா? உண்மையில் அவை நம்மிடம் உள்ளதோ? இல்லையோ? என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் சில பறவைகளிடம் பாசம் உள்ளது பாருங்கள். நினைத்துப்பார்ப்பதற்கே ஆச்சரியமான விசயம்! நாரையில் ''சாரஸ் ஸ்கிரீன்'' என்றோர் இனமுண்டு. இந்த நாரைகள் இந்தியாவின் ராஜஸ்தான் காடுகளில் அதிகமாக இருக்கின்றதாம். நாரை வகையிலேயே இந்த இனம் தான் மனிதன் உயரத்திற்கு வளருமாம். உடலைப்பொறுத்தவரை மனிதனது உயரம். மனதைப்பொறுத்தவரை அதை விட அதிகம் உயரம். இதனது தலை சிவப்பு நிறம். உடல் நீலம் கலந்த சாம்பல் நிறம், அதிக உயரத்தில் பறக்கும். சோடியாக வானில் பறந்து செல்லும் அழகே தனி.

பறவைகளிலேயே ''சாரஸ் ஸ்கிரீன்'' ஜோடிதான் மிகுந்த அன்பாகும். நெருக்கமாகவும் வாழக்கூடியது. விவாகரத்து என்பதெல்லாம் அவையிடம் இல்லை. ஒருமுறை சோடி சேர்ந்து விட்டால் கடைசி மட்டும் இணைபிரிவதில்லை. உண்ணும்போது கூட நின்று கொண்டு தான் உண்ணும். பறக்கும்போது மிகுந்த நெருக்கமாகத்தான் பறக்கும். இரை தேடும் விதத்திலும் இப்படித்தான். தனியாக எங்கேயும் செல்வதில்லை.

அண்மையில் ஒரு திருமண வீட்டிற்குச் சென்றிருந்தேன். ஒரு நண்பர் வந்திருந்தார். ''என்ன சார் மனைவியை அழைத்துக் கொண்டு வரவில்லையா?என்று கேட்டேன். ''மனைவி எதற்கு சார்? வீண்கஸ்டம் மனைவி வெளிக்கிடும் வரை நான் காத்துக்கொண்டிருந்தால் இங்கே திருமணமே முடிந்து விடும். அதனால் தான் நான் மட்டும் தனியாக வந்து விட்டேன்'' என்றார் அவர். இதனைக்கூறும்போது அவரது முகத்தில் ஏதோ பந்தயத்தில் ஜெயித்தது போல் ஒரு வெற்றிக்களிப்பு. இது போன்ற செய்திகள் அந்த நாரைகளுக்கு தெரிந்தால் மிகவும் கோபப்படும். நேராக வந்து கொத்தி விட்டுச் சென்றாலும் செல்லும்.

ராஜஸ்தானில் உள்ள கிராமங்களில் குஞ்சுப் பறவையாக இருக்கும்போது இந்த நாரைகளை வீடுகளில் வளர்க்கின்றார்கள். ஏன் தெரியுமா? அவை நாய் மாதிரி நன்றியுணர்வுடன் இருக்குமாம். ஒருவர் தனது வீட்டில் இந்த நாரையில் ஒரு சோடியை வளர்த்துக்கொண்டிருந்தாராம். அவரது வீட்டில் ஏதோ விசேஷம் வந்தது. அப்போது ஆண் நாரையைச் சமைத்து உண்டு விட்டார். விசேஷத்தை அவரது வீட்டில் எல்லோரும் மிகவும் மகிழ்வாகக் கொண்டாடினார்கள். ஆனால் தனது துணையை இழந்த அந்த பெண் பறவை என்ன செய்தது தெரியுமா? 3 நாட்கள் வரை எதுவும் சாப்பிடவில்லை. பட்டினியாகக்கிடந்து இறந்து போய் விட்டது. இதைக் கண்ணால் கண்ட பலர் அதற்கு பின்பு சாரஸ் ஸ்கிரீனைக் கொல்வதில்லையாம்.

இந்த பறவைக்கு நடனமாடத்தெரியுமாம். இதற்கு நாரை நடனம் என்று பெயராம். முதலில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் போய் நிற்கும். வாகனத்தில் சில்லுச் சுற்றுவது மாதிரி சுற்றிக் கொண்டிருக்கும். அதன் பின் தலையை மேலும் கீழும் ஆட்டும். தரையில் கிடக்கும். இறகுகளையும் சின்னச் சின்ன கற்களையும் தனது வாயால் கவ்வி அவற்றை அப்படியே தூக்கிப்போடும். அழகான இறக்கைகளை வேகமாக அடித்துக்கொண்டு தாவித்தாவி ஓடும். இந்த நடனம் ஏறக்குறைய 20 நிமிடங்கள் வரைநீடிக்கும். ஒரு கூட்டத்தில் உள்ள ஒரு பறவை ஏதாவது காரணத்திற்காக ஆட ஆரம்பித்து விடும். கூட்டமாகச்சேர்ந்து ஆடும்காட்சி பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். இந்தப் பறவை ஒலி எழுப்பினால் அது டிரம்பட் வாசிப்பது போலிருக்கும். பாசமுள்ள இந்தப்பறவை இனத்தைப் பார்க்க யாராவது ஆசைப் பட்டால் வண்டலூர் உயிரியல் பூங்காவில் சென்று பார்க்கலாம். ஆமாம் பாசத்தை இப்போதெல்லாம் மிருகக்காட்சிச் சாலையில் தான் போய்ப் பார்க்கவேண்டியுள்ளது. ஏன் பீச்சில் சென்று தேடக்கூடாதா? என்று கேட்பீர்கள். நான் ஏற்கனவே தேடி விட்டேன். எனது காதில் விழுந்தது என்ன தெரியுமா?

ஒரு இளம் ஜோடி மிகவும் அன்பு பாசமுள்ள ஜோடி போல் தெரிந்தது. அருகில் சென்று என்ன பேசிக்கொள்கின்றார்கள் என்று ஒட்டுக்கேட்டேன். அந்த இளைஞன் கேட்கிறான் ''எப்போது டார்லிங் நமது திருமணம்? '' அந்தப்பெண் கூறுகிறாள் ''கொஞ்சம் பொறுங்கள் உங்களுக்கு ஒரு நல்ல பெண்ணும் எனக்கு ஒரு நல்ல மாப்பிளையும் கிடைக்கட்டும். அதன் பிறகு திருமணத்தை நடத்தலாம்'' என்று. இதற்குத் தான் நான் அப்போதே வண்டலூருக்குப்போங்கள் என்றேன்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

## மீள் குடியமர வழியின்றி முல்லை மக்கள் மனவாட்டம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு, ஒதியமலை மற்றும் பெரிய குளம் ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ் குடும்பங்கள் 19 ஆண்டுகளைக்கடந்தும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளன.

1984 ஆம்ஆண்டு இலங்கை இராணுவத்தின் போர் நடவடிக்கையினால் பாரம்பரியமான தமிழ் கிராமங்களான ஒதியமலை, பெரிய குளம் ஆகிய பிரதேசங்களில் இருந்து சுமார் 370 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

சமாதான சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளபோதும்,தம்மை சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மேற்குறிப்பிட்ட பிரதேச பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (உ-10)

## குற்றச்சாட்டுகளின் பேரில் கடந்தவாரம் 145 பேர் கைது

### பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல்

(கொழும்பு)

கொழும்பு நகரில் பல்வேறு குற்றச் சாட்டுக்களின் பேரில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட 145 பேரும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதி லியனகே கருத்து வெளியிடுகையில்,

திடீர் தேடுதல்களின் போது கடந்தவாரம் கைது செய்யப்பட்ட அனைவரும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருபவர்களை கைது செய்ய இராணுவ அதிரடிப்படையினர் உதவி வருகின்றனர்.

அத்துடன்,கடந்தவாரம் கைது செய்யப்பட்ட 145 பேரில் 19பேர் பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

அதேசமயம்,வியாபார நிலையங்கள் அனைத்தும் உரிய நேரத்திற்குத் திறக்கப்பட்டு உரிய நேரத்தில் மூடப்படவேண்டும். ஏனெனில், வியாபார நேரத்தை தாண்டிய பின்னரும் வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தக நிலையங்களிலேயே பெரும்பாலும் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுவருகின்றன.

இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபட்டுவரும் சந்தேக நபர்கள் பற்றி பொதுமக்கள் ஏதாவது தகவல் அறிந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் உடனடியாக முறையிடவேண்டும் என்று தெரிவித்துள்ளார். (உ-10)

## இலங்கையில் இனக்கலவரங்கள் இனியும் ஏற்பட இடங்கொடுக்கக்கூடாது

### விரிவுரையாளர் அகலகம சமணதேரர்

(கொழும்பு)

இலங்கைச் சரித்திரத்தில் மறக்க முடியாத கறுப்பு நாளாக கருதப்படும் 1983ஜுலையில் நடைபெற்ற கலவரம் தமிழர்களின் மனதில் ஆழப்பதிந்துள்ளது.

இவ்வாறு கொழும்பு பல்கலைக் கழக விரிவுரையாளர் சங்கைக்குரிய அகலகம சமணதேரர் கறுப்பு ஜுலை தினம்பற்றி நேற்று ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட செவ்வியிலேயே தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் தலைநகரான கொழும்பில் இடம் பெற்ற இனக்கலவரத்தில் பல தமிழர்கள் கொல்லப்பட்டமையும் உடமைகள் சேதமாக்கப்பட்டமையும் தமிழர்கள் மனதில் ஆழப்பதிந்துள்ளது. அத்துடன் இக்கலவரம் நடைபெற்று 20 ஆண்டுகளைத்தாண்டியுள்ளது.

எனவே, இத்தகையதோர் கலவரம் இனியும் இடம்பெற நாம் இடம் கொடுக்காது அனைவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும். அத்துடன், சாத்தியமான இன் ஒற்றுமைக்கான தீர்வொன்றை நாம் அவசரமாக எட்டியாகவேண்டும் என்றார். (உ-10)

### இராசி பலன்

**24.07. 2003**

**(ஆடி 08, வியாழன்)**

| | |
|---|---|
| தசமி - | மு.ப. 07.33 வரை |
| கார்த்திகை - | பி.ப. 2.17வரை |
| இராகு காலம்- | 1.32-3.02 |
| சுபநேரம்- | 7.32-9.02 |

**மேடம்**
கடுமையான வார்த்தை, போசன சுகம், அதிக செலவு, காரியதாமதம்.

**இடபம்**
பெரியோர் ஆதரவு, தொழில் விருத்தி, புத்தி சாதுரியம், முயற்சி பலிதம்.

**மிதுனம்**
வாக்கு கலகம்,தந்தை வழி நினைவு, காரிய அலைச்சல், பிரயாணம்.

**கடகம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில் வருமானம் கூடும், குடும்பநன்மை, நல்ல வரவேற்பு.

**சிங்கம்**
புதிய விடயம் அறிதல், கடுமையான பிரயாசை, மேன்மை, இஷ்ட சித்தி.

**கன்னி**
பித்த யோகம், புதிய திட்டமிடல், இட மாற்றம், எதிர்பாரத நன்மை.

**துலாம்**
பிரயாணபயம், நிலைமாற்றம், காரிய தாமதம், உடல் வியாதி.

**விருச்சிகம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, தடைப்பட்டகாரியம் நிறைவேறும், பொருள் சேர்க்கை,தேக நலன்.

**தனுசு**
செய்தொழில் முன்னேற்றம், அறிஞர் சந்திப்பு, காரிய சித்தி, தனலாபம்.

**மகரம்**
புத்திரரால் கவலை, வியாபார விருத்தி, முயற்சி தாமதம், பணத்தட்டுப்பாடு.

**கும்பம்**
மனச்சஞ்சலம், திடீர் நன்மை, அதிக பிரயாசை, வாகன சுகம்.

**மீனம்**
கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, நல்ல சம்பவம், நண்பர்கள் சந்திப்பு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## உள்துறை அமைச்சருக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனு

(கொழும்பு)

அடிப்படை மனித உரிமை மீறல் எனத்தெரிவித்து ஒரு கோடி ரூபா இழப்பீடு கோரி 69வயது பெண் ஒருவர் தாக்கல் செய்ய மனுவில் முதலாவது எதிர் மனுதாரராக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க குறிப்பிடப்பட்டுள்ளார்.

பொரல்லையை சேர்ந்த சித்திராங்கி டிபொன்சேகா என்பவர் தாக்கல் செய்த மனுவில், தான் நடத்தி வந்த விருந்தினர் விடுதியிலும் வீட்டிலும் பலாத்காரமாக உட்புகுந்த பொரல்ல பொலிஸார் தேடுதல் நடத்தியது அரசமைப்பின் 11,12(1), 14(ஜீ) விதிகளின் படி அடிப்படை மனித உரிமை மீறல் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவரது கணவர் இறந்த பின் இவர் பொரல்லையில் விருந்தினர் விடுதி ஒன்றை நடத்தி வந்தார். கடந்த ஜுன் மாதம் 23ஆம்திகதி பொரல்ல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் மற்றும் பொறுப்பதிகாரி ஆகியோர் தமது வீட்டிற்குள்ளும் விடுதிக்குள்ளும் பலாத்காரமாக உட்புகுந்து தேடுதல் நடத்தினர்எனவும் மனுவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சர்ஜோன் அமரதுங்க, பொலிஸ் மா அதிபர், பிரதிப்பொலிஸ் மா அதிபர்,பொரல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவை விசாரணை செய்வதற்கு உயர் நீதி மன்றம் அனுமதியளிக்க வேண்டும் எனவும், ஒரு கோடி ரூபா இழப்பீடு தர வேண்டும் எனவும் மனுவில் கேட்கப்பட்டுள்ளது. (உ)

## அக்கராயன் ஆஸ்பத்திரியில் அடிப்படை வசதிகள் இல்லை

(கிளிநொச்சி)

அக்கராயன் சுற்றயல் கூறும் மருத்துவமனை அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊற்றுப்புலம்,பளைத்தோட்டம், சாந்தி கிராமம், காந்தரூபன் குடியிருப்பு, கோணாவில், யூனியன்குளம், அக்கராயன் மற்றும் அமைதிபுரம், கெங்காதரன் குடியிருப்பு, சமாதானபுரம்,கனிற்றாஸ் குடியிருப்பு, கோட்டைகட்டிய குளம், ஆரோக்கியபுரம், அம்பலப் பெருமாள் குளம்,ஐயனார்புரம், ஆனைவிழுந்தான் குளம், வண்ணேரிகுளம், குஞ்சுக்குளம்,ஸ்கந்தபுரம், கண்ணகிபுரம், மணியங்குளம், சுபாஸ் குடியிருப்பு, முற்கொம்பன், நஞ்சுண்டான் காடு ஆகிய 24 குடியிருப்புக்களைச் சேர்ந்த 28 ஆயிரத்து 600 மக்கள் இந்த வைத்தியசாலையையே நம்பியுள்ளனர்.

அத்துடன் புதுமுறிப்பு, பூநகரி, நல்லூர் ஆலங்கேணி ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களும் இம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

1996 ஆம் ஆண்டு படையினர் மேற்கொண்ட சத்ஜெய படை நடவடிக்கையின் போது கிளிநொச்சியை ஆக்கிரமித்ததன் காரணமாக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை இடம் பெயர்ந்து அக்கராயன் சுற்றயல்கூறு மருத்துவமனையில் கடந்த 7 ஆண்டுகளாக இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

மருத்துவ அதிகாரி,மருத்துவ உதவி அதிகாரி,மருத்துவ தாதியர், உதவியாளர்கள்,ஆய்வுகூட பரிசோதகர், மலேரியாத்தடுப்பு உத்தியோகத்தர், மலேரியாததடுப்பு பரிசோதகர் ஆகிய ஆளணிகளுக்கும் இங்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. (உ-8)

## ஆசிரியர் பதவி உயர்வு டிசம்பர் முதல் அமுல்

(கொழும்பு)

கடந்த 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆசிரியர் சேவை பதவியுயர்வு வழங்கும் திட்டத்தை அடுத்த வருடம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நீடிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆசிரியர் சேவை நிலையியல் குழுக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தில்லைநடராஜா திறைசேரி உயர் அதிகாரிகள்,மற்றும் தொழிற்சங்கங்கள் சார்பில் தமிழர் ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட 6 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அதேசமயம், இக்கூட்டத்தில் ஆசிரியர் சேவையில் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள தொடர்பாக ஆராய்ந்து அடுத்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற இருக்கும் நிலையியல் குழுக்கூட்டத்தில் முடிவெடுத்து பின்னர் அமைச்சரவை அங்கீகாரத்துக்கு சமர்ப்பித்து நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-10)

# நாட்டின் இறைமையை மீறும் வகையில் நோர்வேத் தூதுவர் நடந்துகொள்ளவில்லை

## மக்கள் விடுதலை முன்னணியின் வினாவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கம்

(கொழும்பு)

**இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் நாட்டின் எந்தவொரு சட்டவிதியையும் மீறவில்லை என்பதுடன், அவர் நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படும் விதத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் செயற்படவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றில் நேற்றைய தினம் ''தூதுவர் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு அதிசக்திவாய்ந்த தொலைதொடர்பு உபகரணங்களை வழங்க நோர்வேத் தூதுவர் நடவடிககைகளை மேற்கொண்டாரா?" என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே பிரதமர் ரணில் விகிரம சிங்க இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் அங்கு தொடர்ந்து விளக்கமளித்துப் பேசுகையில்,

தூதுவர் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டத்தை மீறும் தூதுவர்களை இங்கு ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை ஏற்கனவே நான் தெரிவித்திருந்தேன்.

இதேவேளை, 1971ஆம் ஆண்டு இலங்கையில் தேசியப் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும் வகையில் நடந்து கொண்டதற்காக கொரியாவின் தூதுவராலயத்தை மூடி வடுமாறு கோரியிருந்ததையும் நினைவுபடுத்த விருமபுகின்றேன்.

அது மட்டுமன்றி, கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி அரசு இது தொடர்பான அறிக் கையொன்றையும் வெளியிட்டிருந்தது.

எனவே, நாட்டின் சட்டவிதியை மீறாத வகையில் தூது வராலயம் மற்றும் தூதுவராலய அதிகாரிகளின் பயன்பாட்டிற்குத் தேவையான பொருட்கள், நிகழ்ச்சிகளுக்காக பயன்படுத்தக் கூடிய பொருட்களை இறக்குமதி செய்ய முடியும் என்பதையும் கூறி வைக்க விரும்புகின்றேன்.

அந்த வகையிலே தான் நோர்வேத்தூதுவரும் நாட்டின் சட்ட விதிகள் எதனையும் மீறாத வகையில் நடந்து கொள்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார். (உ-10)



# ஜனாதிபதியின் அறிவிப்புகள் அர்த்தமற்றவை எதையும் நிறைவேற்றும் வல்லமை அவருக்கில்லை

## எள்ளி நகையாடுகிறார் காணி அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

இனியொரு யுத்தம் ஏற்படுவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம். அது கரடு முரடான பாதை தான். ஆனாலும் பேச்சுவார்த்தையின் மூலம் நாம் நிரந்தர சமாதானத்தை எவ்வாறாயினும் அடைவோம் என காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.



பொலநறுவை - ஹிங்குராகொடை டட்லிசேனநாயக்க விளையாட்டரங்கில் ஐக்கிய தேசியக் கட்சி கடந்த ஞாயிறன்று பிரதமர் தலைமையில் ஒழுங்கு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றும் போதே ராஜித இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், நாம் முன்னெடுத்துச் செல்கின்ற சமாதான முயற்சிகளின் பயனாக நாட்டில் மீண்டும் ஓர் யுத்தம் மூள விட மாட்டோம், எமது அரசாங்கத்தை ஜனாதிபதியால் கலைக்கவும் முடியாது. மக்கள் இவ்விடயம் குறித்து எதுவும் அஞ்சத் தேவையில்லை.

ஜனாதிபதி சந்திரிகா எமது அரசாங்கத்தைக் கலைப்பதாக அறிவிக்கலாம. ஆனால் அந்த அறிவிப்பு நடைமுறைக்கு வராது. ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு நடை முறைக்கு வர வேண்டுமானால் வர்த்தமானியில் பிரகடனம் வெளியிடப்படவேண்டும். அதற்கு வர்த்தமானியை அச்சிடுவதற்குரிய அரசாங்க அச்சகம் எமது அரசாங்கத்தின் கீழே இயங்குகின்றது. இதனால், எமது அனுமதியின்றி அரச அச்சகத்தில் வர்த்தமானி அச்சிட முடியாது. ஆகவே எமது அரசினைக் கலைக்க ஜனாதிபதியால் முடியாது.

மேலும், ஏற்கனவே அறிவிப்பு விடுத்திருந்த போதும் அபிவிருத்தி லொத்தர் சபைப் பொறுப்பேற்பு விடயம் நடைமுறைக்கு வராதது தெரிந்ததே. இது போலத் தான் ஜனாதிபதி நமது அரசைக் கலைக்க தற்போது விடுத்துள்ள அறிவிபபும் நடைமுறைக்கு வராது. இது சம்மந்தமாக மக்கள் பூரண நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

மேலும், அரச வர்த்தமானி மூலம் வெளியிடப்படாத எந்தவொரு அறிவிப்பும் நடைமுறைப் படுத்தப்படமாட்டாது. இதற்கமைய அரச அச்சகமும், அபிவிருத்தி லொத்தர் சபையும் தொடர்ந்து எமது அரசின் கீழேயே இருக்கும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் அரசியலமைப்பில் காணப்பட்ட சில வழிகள் தான் தற்போது நமக்கு பெரும் உதவியாயிருக்கின்றன் எனக் குறிப்பிட்டுள்ளார்.(உ-18)

### நற்கருணை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை மேற்கு வீதி புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 16ஆம் திகதி பங்குத் தந்தை அருட்திரு ஞானப்பிரகாசம் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்தும் ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை மாலை 5.00மணிக்கு நற்கருணை வழிபாடும் நாளை வெள்ளிக் கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து புனித யாகப்பரின் சொரூபப் பவனியும் இடம்பெறவுள்ளன. (உ - 18)

### வரலட்சுமி விரத விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் வரலட்சுமி விரதவிழா எதிர்வரும் மாதம் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் வரலட்சுமி வசேட பூசை பி.ப. 3.30 மணிககும், சுமங்கலி பூசை பி.ப.4.00 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (உ-8)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு, உற்சவ கால ஏற்பாடுகள் தொடர்பான தீர்மானங்கள் குறித்த கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பி.ப.2.00மணிக்கு மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் நல்லூர் பண்டார மாளிகை வளவிலுள்ள அவரது அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது. (உ-18)

### கஞ்சாத் தோட்டம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தனமல்வில பிரதேசத்தில் பாரியளவில் பயிரிடப்பட்ட இருபது லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாத்தோட்டம் ஒன்றை கலால திணைக்கள அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மொனறாகலை கலால் திணைகக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலை அடுத்து இத்தோட்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கலால் திணைக்கள அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்துள்ளனர். (தி)

# லயன்ஸ் கழகங்கள் இணைந்து யாழில் மலேரியா ஒழிப்புத் திட்டம்

## இவ்வாரம் முதல் நடைமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இயங்கும லயன்ஸ கழகங்கள ஒன்றிணைந்து யாழ்.மாவட்டத்தில் மலேரியா ஒழிப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தி வருகின்றன.

இத்திட்டம் கடந்த திங்கட் கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

உலகநாடுகளின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் இவ் ஐந்தாண்டுத் திட்டத்தில் இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 12 லயன் மாவட்டங்களில 306 பி மாவட்டங்களான யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் என்பன அடங்குகின்றன.

இத்திட்டத்தின் இணைப்பாளர்களாக வத்தளை லயன்ஸ் கழகததைச் சேர்ந்த லக்ஸ்மன், சுன்னாகம் லயன்ஸ் கழகத்தைச சேர்ந்த திருநாவுக்கரசு ஆகியோரும், பிரதம இணைப்பாளராக லயன் டாக்டர் மகஷி நாணயக்காரவும் செயற்பட்டு வருகின்றனர்.

இத்திட்டம் தொடர்பாக வத்தளை மற்றும் சுன்னாகம் லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளால் யாழ். குமாரசுவாமி வீதியில் உள்ள டாக்டர் லயன் லோகேஸ் வரனின் இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இச் சந்திப்பின் போது லயன்ஸ் கழகத்தின் மாவட்டம் 306பி. ஆளுநர் றொகான் பெரேரா, உதவி மாவட்ட ஆளுநர் எஸ்சிவாநநதன், பிராந்தியம் ஐந்தின் தலைவர் றொகான் நாணயக்கார, பிராந்தியம் ஒன்பதின் தலைவர் டாக்டர் யோகேஸ்வரன், பிராந்தியம் எட்டின் தலைவர் டாக்டர் செல்வி தவமலர் கனகரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இத்திட்டம் பற்றி செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் பிரதானமான நடவடிககைகள் சில மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி வறுமைக்கோட்டுக்கு உட்பட்டோருக்குப் பெமித்ரின் மருந்து தோய்க்கப்பட்ட நுளம்பு வலைகள் இலவசமாக வழங்கப்படுவதுடன், நடுத்தரக் குடும்பங்களுக்கு மலிவு விலையில் வழங்கப்படுகின்றன.

கருத்தரங்கு, துண்டுப்பிரசுர வெளியீடு, வானொலி தொலைக் காட்சி நாடகங்கள் போன்ற நடவடிக்கைகளின் ஊடாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப் படுகின்றன.

நீர் நிலைகளில் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் இறக்குமதி செய்யப் பட்ட ''திலாப்பியா" மற்றும் கப்பி மீனினங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. இவற்றைப் பராமரிப்பதற்கேற்ற வகையில் அளவெட்டி மற்றும் கோண்டாவில் பகுதிகளில் இரு விசேட தாங்கிகளும் அமைக்கப்படும்.

மேலும், உளளூர் மூலிகைப பொருட்கள் மற்றும் எண்ணெய்களைப் பயன்படுத்தி நுளம்புகளை ஒழிப்பது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

கர்ப்பம் தரித்த பெண்கள் மற்றும் சிறுவர்களின் இரத்தப் பரிசோதனைகள் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

முதல்கட்டமாக ஆயிரம் நுளம்பு வலைகள் யாழ். மாவட்டங்களில் உள்ள லயன் கழகங்களின் ஊடாக வநியோகிக்கப்படுவதன்படி வருட இறுதிக்குள் 20 ஆயிரம் வலைகள் விநியோகிக் கப்படும்.

இத்திட்டம் தொடர்பாக ஒவ்வொரு மாதமும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படும். சுகாதாரத் திணைக்களம், கிளினிக்குகள், வைத்தியசாலைகள் மற்றும் சமூக அமைப்புகள் அனைத்தினதும் ஆதரவுடன் இத்திட்டம நடைமுறைப படுத்தப்படுகின்றது.

தற்போது மலேரியா நோய பெருமளவு கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அதன் பெருக்கம் சடுதியாக ஏற்பட வாய்ப்புண்டு. மலேரியாவை முற்றாக ஒழிப்பதும் அது குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதுமே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். (உ-8)

# துன்பங்களிலிருந்து மீள்விக்கும் அருமருந்து நகைச்சுவை

நம்மைச் சதா கவலைகளும் துன்பங்களும் சலிப்புமே சூழ்ந்திருக்கின்றன.

''பிறக்கும் போதும் அழுகின்றாய் இறக்கும்போதும் அழுகின்றாய் ஒருநாளேனும் கவலை மறந்து சிரிக்க மறந்தாய் மானுடனே'' என விளிக்கிறது ஒரு சினிமாப் பாடல்.

இந்தத் துன்பத்துக்கும், கவலைக்கும், சலிப்புக்கும் எண்ணங்களும் ஆசைகளுமே காரணம் என்பர் ஆன்மீகவாதிகள். நீருக்குள் வாழும் மீன் அந்த நீரிலேயே வெந்து மடிகிற விதியை அருளிய இறைவன், மனிதனுக்கு எண்ணங்களைப் படைத்து அந்த எண்ணங்களிலேயே வெந்து சாக வைத்தான் என்கிறார் கண்ணதாசன்.

நம்மில் பலரும் வாழ்வில் சந்தித்த துன்பங்களை, நெருக்கடிகளை, இழப்புக்களை, ஏமாற்றங்களை, எண்ணப் புகுந்தாலே அது சிக்கல் வாய்ந்ததாக இருக்கும். மனோதைரியம் அற்றவர்கள் தற்கொலை செய்து விடுவார்கள். ஏனையோரில் சிலர் நடைப்பிணங்களாகத் திரிவர். சிலருக்கு மனோரீதியான பாதிப்புக்கள் நேரும். ஆனால், ''பற்றற்றான் பற்றினைப் பற்றிய''வர்களும், நகைச்சுவை உணர்வு நிரம்பியவர்களும் இவற்றையெல்லாம் எளிமையானவை ஆக்கிவிடுவர்.

நம்மைக் கவலைகள், துன்பங்கள், சஞ்சலங்களிலிருந்து மீட்டு, கடையேற்றியவை இரண்டு. ஒன்று - ஆன்மீகம் தன்னை, உலகை மீறிய சக்தியொன்று தொடர்பான உள்ளார்ந்த நம்பிக்கை.

மற்றது நகைச்சுவை. நகைச்சுவை நவரஸங்களின் தலைப்பிள்ளை. அது ஹாஸ்யரசம் எனப்படும். மனிதர்களிடத்து தவிர்க்க முடியாதபடி நகைச்சுவை உணர்வு உட்புகுந்துள்ளது.

அவ்வுணர்வு நமது துயரங்களை புதைத்தது; சஞ்சலங்களை உடைத்தது; வாழ்வில் நம்பிக்கையைத் துளிர்க்கச் செய்தது.

''வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்'' என்று சொல்வார்கள். இங்கு பிணி தீர்க்கும் அருமருந்தாக நகைச்சுவை அமைகிறது.



நகைச்சுவை பலவழிகளில், வடிவங்களில் நம்மைச் சேர்ந்தது. நூல்கள் மூலம், கட்புல-செவிப்புல ஊடகங்கள் மூலம், நண்பர்கள் மூலம், சம்பவங்கள் மூலம் இது நம்மை அடைந்தது. கவலையை, துன்பத்தை மறக்க, அழிக்க மானிட முன்னோடிகள் சிருஷ்டித்ததே நகைச்சுவை என்றும் கூறலாம். அது மரபுரீதியான, உள்ளார்ந்து பரிணாமம் பெற்ற ஒரு உணர்வென்றும், அதாவது பரம்பரைப் பரிணாமம் கொண்ட உணர்வென்றும் கூடக் கூறலாம்.

''நகைச்சுவை உணர்வு என்னிடம் இல்லாதிருந்தால் நான் என்றோ மறைந்திருப்பேன்'' என்றார் மகாத்மாகாந்தி. இந்த 'நகைச்சுவை என்பது நமது சமூகத் தளத்தில் நீண்ட காலமாக பயிலப்பட்டு வந்த ஒன்றாகும்.

நமது பழந்தமிழ் இலக்கியங்களிலும், தனிப்பாடல்களிலும், நாட்டார் இலக்கியங்களிலும் நகைச்சுவைப் பாங்கான பகுதிகளை நாம் தரிசிக்க முடியும். இந்தப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக - உரைநடையில் நகைச்சுவை உணர்வுள்ள உயிர்ப்புள்ள பாத்திரங்களைக் கொண்ட படைப்புக்கள் உருவாகின.

தெனாலி ராமன், மரியாதை ராமன், முல்லா, பீர்பால், பரமார்த்த குருவும் மட்டி, மடையன், பேதை, மிலேச்சன், மூடன் முதலிய சீடர்களும் பிரதான பாத்திரங்களாக இருக்க அவர்களைச் சுற்றி நடக்கும் கதைகள் நமது வாசிப்புத் தளத்தில் முக்கிய நகைச்சுவைக் கதைகளாக உள்ளன.

தமிழ் நாட்டில் நகைச்சுவை நுல்கள் பலவும் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

பாக்கியம் ராமசாமி முதலானோரின் புனை கதை சார்ந்த படைப்புக்கள் ஒரு புறமாகவும், பேராசிரியர் எ.சோதி முதலானோரால் தொகுக்கப்பட்ட படைப்புக்கள் ஒரு புறமாகவும் வெளி வருகின்றன. நன்மொழிப் பதிப்பகம், மணிமேகலைப் பிரசுரம், அநுராகம் வெளியீடு எனப் பல வெளியீட்டு நிறுவனங்களும் நகைச்சுவை நூல்களை வெளியிடுகின்றன.

அங்குள்ள விற்பனை வசதியும், சினிமாப் பாரம்பரியமும் இந் நூல்களின் பெருக்கத்துக்குத் துணை செய்கின்றன.

வானொலி மூலம் பல்வேறு அறிவு சார்ந்த விடயங்களைக் கூறியும், அவற்றை நூல்களாக்கியும் வரும் தென்கச்சி கோ.சுவாமிநாதன், அவரைப் பின்பற்றி இளசை எஸ்.சுந்தரம் ஆகியோர் நகைச்சுவையைப் பயனுள்ளதாகப் பயன்படுத்திய வகையில் குறிப்பிடத்தக்கவர்கள். கி.ராஜநாராயணன் தொகுத்த நாட்டுப்புறக் கதைகள் பலவற்றிலும் ஆழமான, அறிவார்ந்த நகைச்சுவை அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன.

இலங்கையில் இத்தகைய முயற்சிகள் மிகக் குறைவாகும். செங்கை ஆழியானின் ''ஆச்சி பயணம் போகிறாள்'' நகைச்சுவைப் பாங்கான நவீனம் அவரது ''முற்றத்து ஒற்றைப் பனை'', ''நடந்தாய் வாழி, வழுக்கியாறு '', ''கொத்தியின் காதல்'' முதலானவையும் நகைச்சுவை அம்சங்கள் இழையோடும் படைப்புக்களாகும். அண்மையில் எழுதி வரும் சி.கதிர்காமநாதனது படைப்புக்களிலும் நகைச்சுவை தூக்கலாகத் தெரியும். பொ.சண்முகநாதன், சி.சிவநேசன், திக்கவயல் தர்மகுலசிங்கம் போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்கள். நகைச்சுவைப் புதினங்களை எழுதியவர்களுள் ''அமிர்த கழியான்'' முக்கிய மானவராவார். அண்மையில் இ.ஶ்ரீஸ்கந்தராசா நகைச்சுவைத் தொகுப்புக்களை வெளியிட்டு வருகிறார்.

இலங்கையில் சீரியஸான- மண்ணுக்கேயுரிய தனித்துவமான ஏடாக சிரித்திரன் முகிழ்ந்து மலர்ந்து மறைந்து விட்டது.

சிரித்திரன் சுந்தருடைய நகைச்சுவைகள் சமூக அநீதிகளை எள்ளுபவை; சமூகச் சீர்திருத்தம் நோக்கியவை. அவர் உருவாக்கிய சவாரித் தம்பர், மிஸ்டர் அன்ட் மிஸிஸ் டாமோடிரன் முதலிய பாத்திரங்கள் அழியாப்புகழ் பெற்றவை.

இதற்கு முன்னர் ''கலகலப்பு'' என்றொரு நகைச்சுவை ஏடும் வந்து மறைந்து விட்டது. பின்னர் ''சுவைத் திரள்'' என்றொரு நகைச்சுவை ஏட்டை திக்கவயல் தர்மகுலசிங்கமும, ''சுந்தரன்'' என்றொரு ஏட்டை ம.சி.சந்திரபோலும் கொண்டு வர முயன்றும் அவை நீடிக்க முடியவில்லை.

வரணியூரான் எஸ்.எஸ்.கணேசபிள்ளை, எஸ்.யேசுரட்ணம் ஷோக் கல்லோ சண்முகம், சக்கடத்தார், கே.எஸ்.பாலச்சந்திரன் என நீளும் வானொலி மற்றும் மேடை நகைச்சுவை நாடக கர்த்தாக்களும் கவனிக்கத்தக்கவர்கள்.

இரண்டு தசாப்த கால கொடும் போரின் தளும்புகளை உடலிலும் மனதிலும் சுமந்து வரும் நமது மக்களுக்கு நகைச்சுவை நல்ல ஒத்தடமாக அமையும். நமது மண்ணுக்கே உரிய தனித்துவமான நகைச்சுவைகளை தேடித் தொகுப்பதும், நமது சமூகப் பிரச்சினைகள் தொடர்பான நகைச்சுவைப் புனை கதைகளை எழுதுவதும் நல்ல முயற்சிகளாக அமையும். நகைச்சுவை நூல்களின் தேவை, நகைச்சுவை ஏடுகளின் தேவை நமது சமூகத்திற்கு இன்றியமையாத தேவை எனலாம்.

**இயல்வாணன்**

# எயிட்ஸ் விழிப்புணர்வுத் திட்டங்களுக்குப் பாராட்டு

(ஈச்சமோட்டை)

யாழ். மாவட்டத்தில் யுனிசெவ் நிறுவனத்தின் ஆதரவுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் எயிட்ஸ் நோய் தடுப்பு விழிப்புணர்வு திட்டத்தை கொழும்பு எயிட்ஸ் கூட்டணி பாராட்டியுள்ளது.

இவ்வருட முற்பகுதியில் கொழும்பு எயிட்ஸ் கூட்டணி டாக்டர்கள் தலைமையில் மாற்றுக் கொள்கைக்கான அமைப்பினருடன் இணைந்த குழுவொன்று யாழ்ப்பாணம் வந்து அகதிகள் புனர்வாழ்வு நிறுவன எயிட்ஸ் நோய்த் தடுப்பு விழிப்புணர்வு திட்ட உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்களையும் பின்னர் யாழ்.மாவட்ட அரச, அரசசார்பற்ற பிரதிநிதிகளுடனான மாநாடொன்றையும் நடத்தியிருந்தனர்.

இதில் நோய்த் தடுப்பு விழிப்புணர்வு பிரசார உக்திகள், நோயின் தாக்க புள்ளிவரைபுகள், விழிப்புணர்வின் அவசியம் என்பன பற்றி பல சுற்றுக் கலந்துரையாடல்களும் பயிற்சிப் பட்டறைகளும் திட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக கொழும்பில் இன்னுமோர் மாநாடொன்றை நடத்தி எயிட்ஸ் நோயாளர்களுக்கு சிகிச்சை வசதி வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை அரசுக்கு வலியுறுத்த சகல மாவட்டங்களிலிருந்தும் சமூகசேவையாளர்கள் அழைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவை யாவற்றிலும் சிறப்பாகவும் சேவை நோக்குடனும் இணைந்து இயங்கிய அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்தின் எச்.ஐ.வி எயிட்ஸ் நோய்த்தடுப்பு விழிப்புணர்வுக் குழுவினரையே கொழும்பு எயிட்ஸ் கூட்டணியினர் பாராட்டியதோடு தொடர்ந்து தமது ஆதரவை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ-59)

# ''வியாசனின் உலைக்களம்'' வெள்ளியன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் புதுவை இரத்தினதுரை வியாசன் என்ற புனை பெயரில் உலைக்களம் என்ற மகுடத்தில் கடந்த 12 ஆண்டுகளாக விடுதலைப்புலிகள் ஏட்டில் எழுதிவரும் உணர்வின் வரிகளின் தொகுப்பான ''வியாசனின் உலைக்களம்'' எதிர் வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெளியிடப்படவுள்ளது.

275 பக்கங்களைக்கொண்டு வெகு நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட இந்நூலுக்கான முன்னுரையை அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனும் மதிப்புரையை புலனாய்வுத்துறைப்பொறுப்பாளர் ச.பொட்டுவும் எழுதியுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் நடைபெறும் வெளியீட்டு விழாவில் வெளிச்சம் ஆசிரியர் சி.கருணாகரன், அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு, எழுத்தாளர் ஐ.சாந்தன், பேராசிரியர் அ.சண்முகதாஸ் உட்பட இன்னும் பலர் உரையாற்றவுள்ளனர்.

அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் நூலை வெளியிட்டுவைக்க சிறப்புப்பிரதிகளை யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் மோகனதாஸ் வழங்கிக்கௌரவிக்கவுள்ளார். (உ)

## கொடியேற்றம்

(வேலணை)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 1ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் வரை நடைபெறவுள்ளது. (உ-47)

★ ★ ★ ★

(இணுவில்)

சாவகச்சேரி ஶ்ரீ துர்க்கா தேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த சனியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கடகிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.(உ-96)



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பரிசளிப்பு விழாவிற்கு அதிபர் என்.பத்மநாதன் தலைமை தாங்கி உரையாற்றுகின்றார். பிரதம விருந்தினராக வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அருளாநந்தமும் காணப்படுகின்றார். படம்: பரு.நிருபர்



பருத்தித்துறைக் கூவில் தீபயோதி சனசமூக நிலைய உள்ளூராட்சி வார மரம் நாட்டும் விழாவில் சனசமூக நிலையத் தலைவர் கே.தம்பிமுத்து மரக்கன்று ஒன்றை நாட்டுவதையும் பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் ஏ.ஏ.நடராஜா அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். படம்: பரு.நிருபர்

# காலம் கடந்த ஞானம்

(கொழும்பு)

1983ஆம் ஆண்டு ஜுலையில் இடம் பெற்ற இனக்கலவரத்தின் போது பெருமளவு தமிழர்கள் கொல்லப்பட்டமைக்காகவும் அவர்களின் சொத்தழிவுகளுக்காகவும் தென்னிலங்கையிலுள்ள பெண்கள் அமைப்புகள் ஒட்டு மொத்த தமிழ் சமூகத்திடமும் மன்னிப்புக்கேரியுள்ளன.

இலங்கையின் அன்னையரும் புதல்விகளும் அமைப்பு,சமாதானத்திற்கான பெண்களின் கூட்டமைப்பு, சமாதானத்திற்கான பெண்களின் கருத்தரங்கு ஆகிய மூன்று அமைப்புகளும் இணைந்து நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு மன்னிப்புக்கோரப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;


''ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள், ஆண்கள், குழந்தைகள், தமது உயிரையும் உடமைகளையும் இழக்கக் காரணமாய் இருந்த 1983 ஜுலையில் நடைபெற்ற சோக சம்பவங்களை ஆழ்ந்த மனவேதனையுடனும் மனச்சாட்சியின் உறுத்தலுடனும் நினைவு கூருகிறோம்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இதன் காரணமாகவே தமிழர்கள் பல்வேறு நாடுகளிலும் உள்நாட்டிலும் அகதிகளாய் உள்ளனர். இலங்கையில் கொடூரமான இந்நிகழ்வு நடைபெற்று இருபது வருடங்களாகியுள்ள நிலையில் உத்தியோகபூர்வமாக மன்னிப்பு எதனையும் எந்த அரசாங்கமும் இது வரையில் கோரவில்லை.

இத்தகையதொரு நிகழ்வு இலங்கையில் வாழும் எந்தவொரு சமூகத்தினருக்கும் இனி மேல் இடம்பெறக் கூடாதென்று கூறுவதோடு, நிரந்தர சமாதானத்திற்கு சகல மக்களும் பாடு படவேண்டும். இதனையே நாம் இலங்கை தமிழ்ச் சமூகத்தினரிடமும் அனைத்து மக்களிடமும் எதிர்பார்க்கிறோம்''.

இதுபோன்றதோர் நிகழ்வு இனியும் இடம்பெறாது நாம் கவனமாகப் பார்த்துக்கொள்வோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)




# மனித உரிமை மீறல் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

இலஙகை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் செயலாளர் டபிள்யூ. தயாரட்ண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்ட சமயம்,அவரது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளனவா என்பதை விசாரணை செய்வதற்கு உயர் நீதி மன்றம் தீமானித்துள்ளது.

இது சம்பந்தமான மனு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

பம்பலப்பிட்டி பொலிஸா காரணங்கள் ஏதுவுமின்றி தம்மை கைது செய்து சித்திரவதைக்கு உட்படுத்தியதாக தயாரட்ண நீதி மன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். (தி)

# அபிவிருத்தியில் இரட்டை வளர்ச்சியை அடைய அரசு முயன்று வருகின்றது

## அமைச்சர் எஸ்.பி.உரை

(கொழும்பு)

இலங்கையில் இரு தசாப்த காலமாக இடம் பெற்ற யுத்தத்தின் காயங்களை ஆற்றும் வகையில் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிட்டு இரட்டை வளர்ச்சி வீதத்தை அடைய அரசு முயன்று வருகிறது.

இவ்வாறு கம[illegible]தொழில் கால் நடை வளர்ப்பு அமைச்சர் எஸ்.பி. திஸ நாயக்கா க[illegible]த திங்களன்று நடைபெற்ற சா[illegible] நாடுகளின் வறுமையைப் போக்க சமூக அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயலாளர்களுக்கான 3 நாள் மாநாட்டின் ஆரம்ப நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவிததார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்,

''இலங்கையை மீட்டெடுத்தல்'' என்ற தேசியக் கொள்கைக் கட்டமைப்பில் அடக்கப்பட்டிருக்கும் இலங்கையை அடிப்படையாக கொண்ட ஒரு கொள்கைத் திட்டத்தை அமுலாக்க அரசாங்கம் திட சங்கற்பம் பூண்டு இருக்கிறது.

அத்துடன் கிராமப்பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் வசிக்கும் பெரும்பான்மை மக்களின் வறுமை நிலையைப் போக்குவதற்கு நாட்டில் அமுல் செய்யப்பட்டிருக்கும் கொள்கைத்திட்டங்கள் வழிவகுத்திருக்கின்றன.

சர்வதேச சமூகம், சமாதான முயற்சிக்கு சாதகமான போக்கைக் கடைப்பிடித்து புனரமைப்பு பணிகளுக்கும் அபிவிருத்திக்கும் என 4.5பில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்க உறுதியளித்திருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-10)

# சமாதான முயற்சிகளுக்கு பங்கம் ஏற்படுத்துவதாக பல்கலைச் சம்பவம் அமைந்து விடக்கூடாது

## இதுவே தனது இப்போதைய பிரார்த்தனை என்கிறார் ஜயலத்

(தென்மராட்சி)

வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்களுக்கு சேவை செய்வதற்காக நான் எனது வாழ்க்கையை அர்ப்பணிக்க தயாராகவுள்ளேன். இன்றைய தினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் துக்ககரமானது. எனது சக்திக்கு உட்பட்ட வகையில் இருபது வருடகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்புப் பணியில்தொடர்ந்தும் ஈடுபடுவேன். இச்சம்பவத்தின் மூலம் சமாதான முயற்சிகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாதென்பதே எனது விசுவாசமான பிரார்த்தனை ஆகும்.

இவ்வாறு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா நேற்று முன்தினம் மாலை ''றான்'' பங்களாவில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

ஐரோப்பிய யூனியனால் சுமார் 6 இலட்சம் யூரோ நிதி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்ட 55 பாடசாலைகள் கையளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகப் பங்கு கொள்ளும் படி ஐரோப்பிய யூனியன் என்னை அழைத்திருந்தது.

இதற்கு மதிப்புக்கொடுத்தே நான இங்கு வந்திருந்தேன். இலங்கை அரசின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் என்ற ரீதியிலேயே நான் அழைக்கப்பட்டேன்.


வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களுக்குச் சேவை செய்வதையே உயிர் மூச்சாகக் கொண்டுள்ள எனக்கு,இப்படியான சம்பவம் ஏற்பட்டுள்ளதே என்பதே எனது கவலை.

இருந்தபோதும் கூட, ஐரோப்பய யூனியனிடம் அவர்களது உதவியை தொடரும் படி வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

இதேவேளை,பல்கலைக்கழக மாணவர்களால் கூறப்படுகின்ற அதி உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் பாடசாலைகளில் இராணுவம் தங்கியிருப்பது உண்மையான பிரச்சினைகள் தான். எனது அமைச்சு மூலம் இவற்றுக்குத் தீர்வு கான முடியாது.


சமாதான பேச்சுவார்த்தையில் ஈடுபடும் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், மிலிந்தமொறகொட போன்றவர்கள் தான் இப்பிரச்சினைகள் பற்றி கதைக்கக்கூடியவர்கள். இருப்பினும் இது விடயம் பற்றி நான் பிரதமருடன் பேசுவேன்.


அதேவேளை, தென்பகுதியில் இருக்கக்கூடிய ஜே.வி.பி.போன்ற சகதிகள் இச்சம்பவத்தினை பூதாகாரமானதாக்கி சமாதான நடைமுறைகளைக் குழப்ப முயற்சிக்கலாம். என்ற அச்சமும் ஏற்படுகின்றது. மேலும் எந்தவிதமான பாதுகாப்புப் பந்தாக்களும் அற்ற முறையிலேயே நான் இங்கு வந்து போகிறேன். எனக்கு



எதுவும் நடக்கமாட்டாது என்ற நம்பிக்கை எனக்குண்டு.

என்னைத் தவிர வேறு தமிழ், சிங்கள, முஸலிம் அமைச்சர்கள் பாதுகாப்பு பந்தாக்கள் இல்லாமல் யாழ்ப்பாணம் வரக்கூடுமா என்றும் அமைச்சர் கேள்வி எழுப்பினார். (உ-77,4)





புலோலி மெதடிஸ் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டியிலே வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் எஸ். தாயகன், அதிபர் எஸ். சண்முகராஜாவினால் வரவேற்கப்படுவதையும்,பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை பிரதேச செயலர் ஏ.சிவசுவாமியும் பிரமுகர்களும் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படம்:பரு. நிருபர்)

# சதாம் ஹுசேனின் புதல்வர்கள் இருவரும் யு.எஸ் படைகளால் கொல்லப்பட்டனர்!

## பக்தாத் வீதிகளில் வேட்டுக்களைத் தீர்த்து ஈராக்கியர் கொண்டாட்டம்

(வாஷிங்டன்)

**ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் இரு புதல்வர்களும் ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளினால் கொல்லப்பட்டுவிட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

மொசூல் நகரில் ஒரு வீட்டில் இவர்கள் தங்கியிருப்பதாக ஈராக்கிய வட்டாரங்களில் இருந்து கிடைத்த இரகசிய தகவல்களை அடுத்து, ஹெலிகொப்டர்களின் உதவியுடன் 200 அமெரிக்கப் படையினர் அந்த வீட்டை முற்றுகையிட்டு நடத்திய கடும்தாக்குதலில் சதாம் ஹுசைனின் புதல்வர்கள் யூதே, குசே ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர் என்றும் அவர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. மொசூல் நகரில் நடந்த கடும் துப்பாக்கிச் சமரில் அவர்கள் இருவரும் கொல்லப்பட்டுவிட்டனர் என்பதைத்தாம் 'உறுதியாக' நம்புவதாக பக்தாத்திலுள்ள அமெரிக்க இராணுவத் தளபதி கூறியுள்ளார்.



சதாம் ஆட்சியின்போது மிகவும் செல்வாக்குள்ளவர்களாகவும் மக்களை அச்சுறுத்தியவர்களாகவும் கருதப்பட்ட இவ்விருவரின் மரணம் பற்றிய செய்திகள் பக்தாத் வீதிகளில் வரவேற்கப்பட்டன. சிலர் ஆகாயத்தில் குண்டுகளைத் தீர்த்து மகிழ்ந்தனர்.

### எதிர்த்துத் தாக்கினர்

மொசூல் நகரின் வடபகுதியில் உள்ள ஒரு வீட்டின் சுற்றாடலை அமெரிக்க இராணுவத்தினர் அடைந்த போது, அவர்கள் தாக்குதலுக்குள்ளாகினர். ஹெலிகொப்டர்களில் இருந்து ரொக்கட்டுக்களை வீசி பதில் தாக்குதல் நடத்தினர். இந்தச் சண்டை சுமார் 6 மணி நேரம் நீடித்தது. இதில் 4 அமெரிக்கப்படையினர் காயமடைந்தனர்.

இறந்தவர்களை அடையாளம் காண்பதற்கு பலதரப்பட்டவர்களை நாங்கள் பயன்படுத்தினோம் என்று அமெரிக்க அதிகாரி லெப்டின் ஜெனரல் றிக்கார்டோ சஞ்செஸ் கூறினார். யூதே ,குசே ஆகிய இருவரதும் உடல்களும் அடையாளம் காணக்கூடிய நிலையில் இருந்ததாகவும் அவர் கூறினார்.

### சதாமின் பேரனும் மோதலில் மரணம்

சதாம் ஹுசைனின் மகன்மாருடன் வேறு சிலரும் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட வில்லை. ஆனால் ஒருவர் சதாமின் புதல்வர்களில் ஒருவரின் பள்ளிப்பருவ மகனாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. மற்றவர் அவர்களின் பாதுகாவலர்.

இவர்கள் தங்கியிருந்த வீட்டைப் பற்றிய தகவல் கொடுத்தவரான ஈராக்கியருக்கு ஏற்கனவே அமெரிக்கா வாக்குறுதியளித்துள்ள 15 மில்லியன் டொலர் பணத்தில் ஒரு பகுதியாவது பரிசாகக் கிடைக்கும் என்று கருதப்படுகின்றது.

### எண்ணெய் விலை வீழ்ச்சி

சதாமின் புதல்வர்களின் மரணச்செய்தி வெளியான கையோடு, உலக சந்தையில் எண்ணெயின் விலை 5 வீத வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. சதாமின் இரும்புக்கர ஆட்சியில் இந்த இரு புதல்வர்களும் பெரும்பங்கு வகித்தனர். அவர்கள் தலைமறைவாகி இருந்தபோதும் கூட மக்கள் மீதான அவர்களின் அழுத்தம் குறைந்திருக்கவில்லை.

### மகிழ்ச்சி ஆரவாரம்

செவ்வாய்க்கிழமை மாலை சதாமின் புதல்வர்களின் மரணம் தொடர்பான செய்திகள் வெளியானவுடன், பக்தாத் நகரில் துப்பாக்கி வேட்டுக்கள் பரவலாகக் கேட்டன. அவர்களின் மரணத்தை வரவேற்றே இவ்வாறு ஈராக்கியர்கள் கொண்டாடியதாக தெரிகிறது.

ஹசன், சாயுஸ் என்ற ஈராக்கியர் தனது கலஸ்நிக்கோர் துப்பாக்கியிலிருந்து வேட்டுக்களை ஆகாயத்தில் தீர்த்து விட்டு யுதேயும், குசேயும்இறந்து விட்டார்கள். அதை நாங்கள் தொலைக்காட்சியில் பார்த்தோம் என்றார்கள். அதேசமயம் யூதேயின் முன்னாள் தொலைக்காட்சித் தயாரிப்பாளர் அலா அகமட் என்பவர் அவர்களின் மரணம் குறித்து ஏமாற்றம் அடைந்தவர்களாகக் காணப்பட்டனர். ''அவன் சாகக்கூடாது ஏனென்றால் அவனை நான் வதை செய்து கொல்லவேண்டும்" என்று அலா ரொய்டர் நிருபரிடம் கூறினார்.

### புதிய ஈராக்கிற்கு இது ஒரு பெருநாள்
*ரொனிபிளேயர்*

அமெரிக்காவிடம் உள்ள 55 பேர் பட்டியலில் மிகவும் தேவைப்பட்ட மூன்று நபர்களில் இவர்கள் இருவரும் அடங்குவர். முதலாமவர் சதாம் ஹுசைன்.

புதிய ஈராக்கிற்கு இது ஒரு பெருநாள் என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் கூறினார். பக்தாத்தில் நடைபெறும் இக்கொண்டாட்டங்கள் அந்த இருவரும் எவ்வளவு மோசமானவர்களாக இருந்துள்ளார்கள் என்பதைக் காட்டுகின்றன என்றார் பிளேயர்.

வெளிநாட்டில் வாழும் சதாம் ஆட்சிக்கு முன்னர் ஈராக் அமைச்சரவையில் இருந்தவராக அகமட் அல்-ஹபவுபி கருத்து வெளியிடுகையில்,

''அவர்களை உயிருடன் பிடித்து விசாரணை நடத்தியிருந்தால்,அவர்களின் கொடுமைகளும் குற்றங்களும் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் என்றார்.

குசேக்கு 36 வயதுசதாமுக்குப் பிறகு இவரே ஆட்சிக்கு வருவதாக இருந் தார். நாட்டின் பாதுகாப்பு அரண்கள் அனைத்திற்கும் இவரே பொறுப்பு. பேரழிவு ஆயுதங்களை மறைத்து வைப்பதும் இவரது பொறுப்பு.

யுதேக்கு 39 வயது. நாட்டின் ஊடகத்துறை இவரது பொறுப்பில் இருந்தது. வெளிநாட்டு சட்டவிரோத வியாபாரத்திற்கு இவரே பொறுப்பு. இதன் மூலமே இவர்களின் ஆட்சி நீடித்துப் பதவியில் இருக்க முடிந்தது. தன்னைப் போலவே இரக்கமற்ற செயல்களுக்கு இவர் பெயர்பெற்றிருந்தார். இவர் ஒருமுறை தந்தையின் உறவினரைக் கொலை செய்தார். நாட்டின் கால்பந்து அணி வெளிநாட்டில் தோல்வியுற்று வரும்போதெல்லாம் வீரர்களுக்குப் பிரம்படி கொடுக்கும்படி கட்டளையிடுவது இவரது வழக்கம். (பி-2)

# லைபீரியாவுக்குள் நுழைய அண்டை நாடுகளின் படைகள் தயார்!

## ஆபிரிக்கத் தலைவர்களின் முடிவு எதிர்பார்ப்பு

(மன்ரோவியா)

பயங்கர மோதல்கள் நடந்து கொண்டிருக்கும் லைபீரியாவுக்குள் நுழைவதற்கு நைஜீரியாவிலும் அருகாமையிலுள்ள ஏனைய நாடுகளிலும் படைகள் ஆயத்தமாக உள்ளன. ஆனால் செனிகலில் நடைபெறும் மேற்காபிரிக்க இராணுவத் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்படவிருக்கும் முடிவை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

கடந்த சில தினங்களில் இடம்பெற்ற மோதல்களில் 600 பொது மக்கள் வரை கொல்லப்பட்டு விட்டதாக லைபீரிய பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்த போதிலும் சுமார் 100 பேர் வரை மட்டுமே கொல்லப்பட்டிருப்பதாக மனிதநேய அமைப்புக்கள் உறுதிப்படுதியுள்ளன.

இதற்கிடையில் தமது படைகளுக்கு, எல்லாத் தாக்குதல்களையும் நிறுத்திவிடும்படி தீவிரவாதிகளின் பேச்சாளர் ஒருவர் கானாவிலுள்ள ஊடகங்களுக்குக் கூறினார். ஆனால் இதேபோன்றதொரு உத்தரவு தீவிரவாதத் தலைவரால் சில தினங்களுக்கு முன் விடுக்கப்பட்டதாகவும் களத்தில் நிற்கும் அவர்களது படைகள் அதைக்கண்டு கொள்ளவில்லை என்றும் நிருபர் ஒருவர் கூறினார். இந்தமாத முற்பகுதியில் அமைதி ஏற்பாடுகள் முறிவடைந்ததையடுத்து ஏற்பட்டுள்ள இரத்தக்களறியை நிறுத் தும் வகையில் அருகாமையில் உள்ள நாடுகளும் ஐ.நாவும் தீர்க்கமான முடிவுகளை உடன் எடுக்க வேண்டும் என்று ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனான் கேட்டுக்கொண்டுள்ளார்.

யுத்தப்பகுதிகளை தவிர்த்து இராஜதந்திரப் பகுதிகளில் அடைந்து போயிருக்கும் மக்கள் பெரும் அவதிகளுக்குள்ளாகியுள்ளனர். தொடர்ந்து பெய்யும் மழை அவர்களின் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. அமெரிக்கக் கடற்படைக்கப்பலொன்று அங்கு அனுப்பவிருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனால் எம்மாதிரி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரியவில்லை. (பி-2)

# காகச் சண்டையால் குழந்தை தப்பியது

(டாக்கா)

இரத்தக்கறை படிந்த பிளாஸ்ரிக் பையைப் பறித்து செல்வதில் 2 காகங்கள் போட்ட 'சண்டையால் ஒரு பச்சிளம் பெண் குழந்தை உயிர் பிழைத்தது. இச்சம்பவம் வங்க தேசத்தில் ராஜ்ஷாகி என்ற இடத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ராஜ்ஷாகியில் இரத்தக்கறை படிந்த பை ஒன்று கிடந்ததைக் கண்டு அதில் உணவு இருப்பதாகக் கருதிய 2 காகங்கள் அதற்காக சண்டை போட்டுக்கொண்டன. பையை எடுத்துக்கொண்டு பறந்து செல்வதற்காக காகங்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்த சமயத்தில் பைக்குள் இருந்து குழந்தை அழும் சத்தம் கேட்டது. அதைக் கேட்ட பொதுமக்கள் காகங்களை விரட்டி பையைத் திறந்து பார்த்தபோது, அப்போது தான் பிறந்த பெண் குழந்தையொன்று அதில் இருந்தது தெரியவந்தது. அக்குழந்தையைப் பொதுமக்கள் உடனடியாக மருத்துவ மனையில் சேர்த்தனர். (பி)

# ம.கிழக்கு சமாதானத்தை குழப்ப ஈரானும் சிரியாவும் முயற்சி

## அமெரிக்க அதிபர் குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளை குழப்பும் ஆயுதக் குழுக்களுக்கு ஈரானும், சிரியாவும் ஒத்துழைப்பு வழங்குவதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் குற்றஞ் சாட்டியிருக்கின்றார்.


இத்தாலியப் பிரதமர் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதி புஷ் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை, அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவைத் தனிமைப்படுத்துவதற்கு பிரான்ஸ் எடுத்து வரும் முயற்சிகளுக்கு மத்தியில் ஐக்கிய அமெரிக்காவுடன் ஐக்கியமாகச் செயற்படுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என இத்தாலியப் பிரதமர் வெல்ஸ்கோணி கூறியிருக்கின்றார்.

நாசகார செயற்பாடுகள், பிளவுகள் என்பன ஒருபோதும் வெற்றியளிப்பதில்லை என குறிப்பிட்ட வெல்ஸ்கோணி, இணைந்து செயற்படுவதற்கான வழிமுறைகளைச் சீர்திருத்திப் பார்க்கவேண்டும் என்று கூறியிருக்கின்றார்.

மேலும், அமெரிக்காவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டுமெனவும் கூறியுள்ளார். (பி-9)

WORLD NEWS உலக தரிசனம்



இந்தியா-பாகிஸ்தானிடையே பேருந்து போக்குவரத்துதொடக்கப்பட்டதையடுத்து, இருதயம் பாதிக்கப்பட்டிருந்த பாகிஸ்தான் சிறுமி நூர் ஃபாத்திமா இந்தியாவில் சிகிச்சை பெறும் வாய்ப்பு கிடைத்துள்ளது. பாத்தி மாவிற்கு இருதய அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. தற்போது பாத்திமா குணமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# தென்கொரியாவில் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளை பிரிக்கும் முயற்சி வெற்றி

(சிங்கப்பூர்)

முதுகுப் பகுதியில் ஒட்டிப்பிறந்த தென்கொரிய இரட்டைப் பெண் குழந்தைகளை சிங்கப்பூர் வைத்தியர்கள் சத்திரசிகிச்சை மூலம் நேற்று முன்தினம் வெற்றிகரமாக பிரித் தெடுத்திருக்கின்றனர்.

தலையொட்டிப்பிறந்த ஈரானிய இரட்டைச் சகோதரிகளை இரண்டு வாரங்களுக்கு முன்னர் பிரித்தெடுப்பதற்கு சத்திரசிகிச்சை மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இறுதியில் தோல்வியடைந்த அதே வைத்தியசாலையிலேயே இந்த சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பிரித்தெடுக்கப்பட்ட 4 மாத குழந்தைகள் இருவரது தேகாரோக்கியம் குறித்து வைத்தியசாலை பேச்சாளர் டாக்டர் பிரேம்குமார் நாயர் எதுவும் தெரிவிக்கவில்லை. இரட்டைக்குழந்தைகளான இருவருக்கும் டாக்டர் ஜங்ஷிங்ஹியூ தலைமையில் நடத்தப்பட்ட சத்திர சிகிச்சை 28 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் செலவில் மேற் கொளளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (பி-9)

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. - குறள்

வலம்புரி

## கலாசாரத்தை பேணுங்கள்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் இப்போது தாராளமாக யாழ்ப்பாணத்திற்கு தமது உறவினர்களிடம் வந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. பத்துப்பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் பல்வேறு காரணங்களினால் வெளிநாடுகளுக்குச் சென்றவர்களால் யுத்த சூழ்நிலையிலும் யாழ்ப்பாணத்துப் பொருளாதாரம் ஈடு கொடுத்தது.

தம்மை ஒறுத்து, தமது உறவுகளுக்காகத் தியாகம் செய்து உடல் உழைப்பை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்து உறவுகளின் மகிழ்ச்சியில் ஆனந்தம் அடைந்தவர்கள் அவர்கள். சுருங்கக் கூறின் இன்றைய யாழ்ப்பாணத்தின் பொருளாதார பலமே வெளிநாடுகளில் வாழும் நம்மவர்களின கையில்தான் தங்கியுள்ளது எனலாம். அவ்வகையில் அவர்களின் அர்ப்பணிப்புக்களை எளிதில் மறந்து விட முடியாது.

அதேவேளை, தாம் பிறந்த மண்ணை மறந்து விடாமல், தற்போதைய சமாதான சூழ்நிலையில் அவர்கள் இங்கு வந்து செல்வது மிகவும் மகிழ்வுக்குரியது. அ∴து உறவுகளுக்கிடையேயான உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்துவதாகவும் இருக்கும்.

ஆனால், அவர்கள் வெளிநாடுகளில் இருந்து தாம் பிறந்த மண்ணுக்கு வருகின்றபொழுது அவர்களோடு ஒட்டிக் கொண்டு வருகின்ற வெளிநாட்டுக் கலாசாரம் மிகவும் வேதனையைத் தருகின்றது. குறிப்பாகப் பெண்களின் ஆடை அலங்காரங்கள், நடை உடை பாவனைகள், தமிழர்களின் கலாசாரத்தைக் குழிதோண்டிப் புதைப்பதாக இருப்பதுடன், அவர்களின் கலாசாரப் பிறழ்வுகள் அவர்கள் பற்றிய நடத்தை சார் முடிபுகளைத் தவ்றாகக் கணித்துக் கொள்வதற்கும் வகை செய்துவிடுகிறது.

எங்கு போனாலும், அந்தந்த கலாசார விழுமியங்களைக் கடைப்பிடிப்பது அறிவு சார் செயற்பாடாகும். அவ்வகையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிநாட்டுக்குச் சென்ற நம்மவர்கள் இந்த மண்ணுக்கு வந்து செல்வதையிட்டு பெருமையடையும் அதேவேளை அவர்கள் தாங்கள் வாழ்ந்த மண்ணின் கலாசாரத்தை மதித்து அதன்படி நடக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்துப் பொருளாதாரத்தை ஏந்திக் கொண்ட நீங்கள் யாழ்ப்பாணத்தில் மற்றவர்களின் பார்வையில் காட்சப் பொருட்களாக இருப்பதை நன்றி உள்ள எவருமே விரும்பமாட்டார்கள்.

# இடைக்கால நிர்வாகசபை யோசனைகளை ஆராய கதிர்காமர் தலைமையில் நால்வர் கொண்ட குழு

## ஜனாதிபதி சந்திரிகா நியமித்துள்ளாராம்



(கொழும்பு)

அரசாங்கத்தினால் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள உத்தேச இடைக்கால நிர்வாகசபை தொடர்பான யோசனைகள் குறித்து ஆராய்வதற்காக முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் நால்வரைக் கொண்ட குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

நால்வர் கொண்ட இக்குழு விலஏனைய உறுப்பினர்களாக, பாராளுமன்ற உறுப்பினர்களான நிமால் சிறிபால டி.சில்வா, சுசில் பிறேம் ஜெயந்த ஆகியோரும் எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

இதேசமயம் அரசாங்கத்தினால் கடந்த 17ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ள உத்தேச இடைக்கால நிர்வாகசபை தொடர்பான யோசனைகள் அடங்கிய திட்டவரைபை கடந்த 21ஆம் திகதியே ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரசதரப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில்,

அரசினால் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்ட வரைபு தமக்கு கிடைக்கவில்லையெனவும், இலங்கை அரசியல் அமைப்பின்படி, இடைக்கால நிர்வாகசபையை ஜனாதிபதி மட்டுமே விடுதலைப்புலிகளுக்கு வழங்க முடியும் என்றும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத்அமுனுகம குற் றம் சுமத்திப் பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, இடைக் கால நிர்வாக நகல் திட்ட வரைபு குறித்த பதிலை விரை வில் தமிழீழ விடுதலைப் புலி களின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அரசிற்கு அனுப்பிவைப்பார் என தமிழீழ விடுதலைப்புலிகளின ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்ரர் தெரிவித்ள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.



(உ-10)

## கண்ணிவெடியில் சிக்கிய யானை மரணத்தைத் தழுவியது

(கிளிநொச்சி)

ஒட்டுசுட்டான் பகுதிக் காட்டில் நிலக்கண்ணி வெடியில் சிக்கி படுகாயமடைந்த யானை நேற்றைய தினம் இறந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்களன்று இரவு கண்ணி வெடியில் சிக்கி படுகாயமடைந்த மேற்படி யானைக்கு விடுதலைப்புலிகளின் வனப்பாதுகாப்புப் பிரிவினர் உடனடிச் சிகிச்சையளித்ததுடன், அதற்கு மேலதிக சிகிச்சை வழங்க இலங்கை வனப்பாதுகாப்புப் பிரிவினரின் உதவியையும் நாடியிருந்தனர்.

இதற்கிணங்க, நேற்று முன்தினம் சுகாதார முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் தாரக பிர சாத் உள்ளிட்ட வைத்தியர் குழுவொன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவினர் சகிதம் கிளிநொச்சி புறப்பட்டிருந்தது.

நேற்றையதினம் யானை இறந்ததையடுத்து, மேற்படி குழுவினர் கிளிநொச்சி செல்லாமலே இடைவழியுடன் கொழும்பு திரு ம்பி விட்டதாகத் தெரிவிக்கப்படு கிறது.

(உ)

## அதிரடிப்படையினர் பயணித்த டிரக்வண்டி குடைசாய்ந்தது

### 46 பேர் படுகாயம்

(கொழும்பு)

அம்பாறை ஏறகம சிங்கபுர பகுதியில் அதிரடிப்படையினர் பயணம் செய்த டிரக்வண்டியொன்று குடைசாய்ந்ததன் காரணமாக சுமார் 46 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அம்பாறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தகவல் தருகையில்,

காயமடைந்தவர்கள் அம்பாறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, அவர்களில் ஒருவரின் நிலை மிகவும கவலைக்கிடமாக இருந்தது.

இதனால் அவரை உடனடி யாக பதுளை வைத்தியசாலை க்கு கொண்டு செல்லப்பட்டது என்றார்.

இதேவேளை விடுமுறைக் குச் சென்று விட்டு மீண்டும் சேவைக்கு திரும்பிய சமயமே இந்த விபத்து இடம் பெற்றதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(உ-10)

## உள்ளூராட்சி வாரவிழா

(வேலணை)

வேலணையில் உள்ளூராட்சி வாரவிழா கடந்த திங்கட்கிழமை தேவா திறந்த வெளியரங்கில் வேலணை பிரதேச சபைத்தலை வர் செ.சண்முகராசா தலைமை யில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வேலணைப் பிரதேச செயலர் செ.இரத்தினம், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த இமயவன், தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் அருந்தவம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(உ-47)

## எழுத்தாக்கப் போட்டிகளில் திருமலை முன்னணியில்

(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த வடக்கு-கிழக்கு மாகாண மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்த்தின எழுத்தாக்கப் போட்டிகளில், 6 முதலிடங்களைப் பெற்று திருகோணமலை மாவட் டம் முன்னணியில் உள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்கள் தலா இரண்டு முதலிடங்களையும், கிளிநொச்சி, கல்முனை மாவட்டங்கள் தலா ஒவ்வொரு முதலிடத்தையும் பெற்றுள்ளன.


மட்டக்களப்பு, மன்னார் மாவட்டங்கள் எந்தப் போட்டியிலும் முதலிடத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை.

இதேவேளை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள் தலா 3 இரண்டாமிடங்களையும், வவுனியா மாவட்டம் 2 இரண்டாமிடங்களையும், திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, மன்னார் ஆகிய மாவட்டங்கள் தலா ஒவ்வொரு இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

கல்முனை மாவட்டம் 3 மூன்றாம் இடங்களையும், திருகோணமலை, யாழ்ப்பாணம் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் தலா 2 மூன்றாமிடங்களையும், மன் னார் மாவட்டம் ஒரு மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன.

(உ)

### சாயி அருளமுதம்



வாழ்க்கை என்பது என்ன? அது சேற்றில் கிடந்து உழல்வதற்கா அல்லது நித்தியமானதை நோக்கி நேராக நடந்து செல்வதற்கா? உங்களுக்கு மகிழ்ச்சிதரக் கூடியவை எவை என்பதைச் சொல்ல பல இலட்சக் கணக்கானவர்கள் இருக்கின்றனர். ஆனால் உங்களுக்கு எது நல்லதென்று சொல்வதற்கு பத்து லட்சம்பேரில் ஒருவரைக் கூடக் காணுதல் அரிது. உங்களுக்கு நன்மை பயக்கும் பொருள் சத்தியத்துடன் இணைந்த தொன்றாகும். சத்தி யம் கடினமானதாயினும் நன்மை பயப்பதாகும். ''எதை இழக்க நேரிட்டாலும் சத்தியத்தைக் கைவிடாதே'' என ஒருவருக்குச் சொல்வது வெறுப்பை ஏற்படுத்தக்கூடிய அறிவுரைதான். ஆனால் சத்தியம் ஒனறுதான் திருப்தி யளிக்கக் கூடிய பயன்களைத் தரவல்லது. நன்றி

நாளாந்த நற்சிந்தனை.

## காலை பிரார்த்தனையின் போது பாம்பு தோன்றியதால் மாணவர் களேபரம்

### 3 மாணவிகள் மயங்கி விழுந்தனர்

(உடுவில்)

மாணவர்கள் காலைப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த போது பாம்பொன்று தோன்றியதால் ஏற்பட்ட களேபரத்தில் மூன்று மாணவிகள் மயக்கமடைநதனர். இச்சம்பவம் கடந்த வெளளிக்கிழமை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் இடம் பெற்றது.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, கடந்த வெள்ளிககிழமை பாடசாலைக்கு அருகிலுள்ள கோயிலில் மாணவர்கள் காலைப பிராத்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, பாம்பொன்று அருகிலுள்ள மரக்கிளையில் இருந்தவாறு ஆடிக்கொண்டிருந்ததை அவதானித்தனர். இதனைக் கண்டு பதற்றமடைந்த மாணவர்கள் கலைந்து செல்ல முற்பட்ட வேளையில் ஏற்பட்ட குழப்பத்தினால், மூன்று மாணவிகள் மயங்கி விழுந்த னர். பின்னர் இவர்கள் சிகிச் சைக்காக தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையின் பின் வீடு திரும்பினர்.

(பி-261)

## இலங்கை - தென்னாபிரிக்கா இரட்டைவரி ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கை - தென்னாபிரிக்க இரட்டைவரி ஒப்பந்தம் ஒன்று விரைவில் கைச்சாத்திடப்படவுளளதாக, உள்நாட்டு வருமானத் திணைக்களம தெரிவித்துள்ளது.

இலங்கை இதுவரை 31 நாடுகளுடன் இரட்டைவரி ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

அமெரிக்காவுடன் இலங்கை செய்து கொண்ட இரட்டைவரி ஒப்பந்தம் இன்னமும் நடைமுறைபடுத்தப்படவில்லை என திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வரி முறைமைக்கு ஏற்ப நாட்டில் இருந்து கிடைக்கும் வருமானத்துக்கு ஏற்ப இலங்கையில் வரி செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது.

(தி)

# உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை உடனடியாக இடை நிறுத்துக

## ஜனாதிபதி பிரதமருக்கு கடிதம்

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரிச் சட்ட மூலத்தை உடனடியாக இடைநிறுத்தி வைக்குமாறு ஜனாதிபதி குமாரதுங்கா பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். வரி மன்னிப்புக்கள்,மீளளிப்புக்கள் வழியாக சுங்கத் திணைக்கள வருமானங்கள் சுமார் 13 பில்லியன் வரை இழப்பு ஏற்படும் என்று சுட்டிக் காட்டியுள்ள ஜனாதிபதி விரைவில் அமைச்சர்கள் கூட்டம் நடத்தி மேற்படி சட்ட மூலத்தை இரத்துச் செய்வதற்குத் தீர்மானிக்க வேண்டும் என்று கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

மேற்படி சட்டமூலம்,நான் பிரதிநிதித்துவப்படுத்தாத அமைச்சரவையின் பொருளாதாரக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு,ஜனவரி 8-ம் திகதி அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஜனவரி22-ம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் உறுதி செய்யப்பட்டிருந்தது.மேற்படி இரு அமைச்சரவைக் கூட்டங்களிலும் நான் கலந்து கொள்ளவில்லை.நான் சமுகமளிக்க முடியாமை பற்றி பிரதமருக்கு அறிவித்திருந்தேன்.

அதிமுக்கியம் வாய்ந்த அரச விவகாரங்கள் அமைச்சரவையில் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டமைக்கு இது ஒரு உதாரணமாகும்.அத்துடன் இச் சட்ட மூலத்தின் உள்ளடக்கத்தின் தாற்பரியங்கள் அமைச்சரவைக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறாக அமைச்சரவையின் ஒப்புதலுக்கு பின் மேற்படி சட்ட மூலம் ''உள்நாட்டு இறைவரிச் (விஷேட ஏற்பாடுகள்)சட்டமூலம்''எனப் பெயரிடப்பட்டு பாராளுமன்றத்திலும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனை பரிசீலனை செய்த நான் இப்பொழுது பல அதிருப்திதரக் கூடிய விடயங்களை கண்டுகொண்டுள்ளேன்.முதலாவதாக இச் சட்டம் வரி விவகாரத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை.அதற்கு அப்பாலும் சென்று உள் நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் நிர்வகிக்கப்படாத விடயங்கள் கூட இச் சட்டமூலத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தன.இவற்றுள் சில பீனல் கோட் சட்டத்தின் மூலமாக தண்டிக்கப்படக் கூடிய விடயங்களாக இருக்கின்றன. ஜனாதிபதியின் மூலம் மட்டும் மன்னிப்பு வழங்கக் கூடிய விடயங்களும் அடங்கியிருந்தன.

இன்றும் தீர்த்து வைக்கப்படாதிருக்கும் சுங்க வழக்குகளைத் தள்ளுபடி செய்வதன் மூலம் ஒன்பது பில்லியன் ரூபாவும் ஏற்கனவே சேகரிக்கப்பட்ட வரிகளுக்கு மீளளிப்பு வழங்குவதன் மூலம் 4 பில்லியன் ரூபாவும் அரசாங்கத்தினால் இழக்கப்படவிருக்கிறது.

இது ஒருபுறமிருக்க இந்தச் சட்டடத்தின் மூலம் வழங்கப்படவிருக்கும் வரி மன்னிப்பு,ஐ.நா பாதுகாப்புச் சபையின் பயங்கரவாத நிதி மற்றும் சட்டவிரோத நாணய மாற்று நடவடிக்கைகள் தொடர்பான அரசின் சர்வதேச கடப்பாடுகளுடனும் சம்பந்தப்படுமா? என்பது விவாதத்திற்குரிய விடயமாகவுள்ளது.இச் சட்ட மூலத்தினால் சட்டத்தை மீறிச் செயல்படும் சிலர் மிகுந்த அனுகூலம் பெறஇடமுண்டு.

மொததத்தில் இந்தச் சட்டமூலம், அமைச்சரவையின் உறுப்பினர்களுக்கும்,பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்படாமல் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டிருப்பது தெரிகிறது.இது பொருளாதாரத்திற்கு மட்டுமல்ல பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் நீதியினடிப்படையிலும் முரண்பாடு உடையதாகும்.

இந் நிலையினைக் கருத்திற் கொண்டு. மேற்படி சட்ட மூலத்தை உடனடியாக இடைநிறுத்துவதுடன் இதனை பாராளுமன்றம் ரத்துச் செய்வதற்கு செதியாக ஏற்ற அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கவேண்டுமென்றும் ஆலோசனை கூறுவதற்கு நான் விரும்புகிறேன். இவ்வாறு ஜனாதிபதியின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### அமைச்சர்கள்...

அமெரிக்க புலனாய்வு ஆலோசகருக்கும் இடையே நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.தொலை பேசிகளை இடைமறித்து ஒட்டுக் கேட்க வேண்டிய அமைச்சர்களின் பெயர்ப்பட்டியல் இந்த அமெரிக்கரினால் வழங்கப்பட்டிருக்கிறது.முதலில் வாரந்தோறும் புறூஸ் பொப்மனுக்கு வழங்கப்படும் உரையாடல் பதிவுகள் பின்னர் அவர்களின் சிபார்சுகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குக் கையளிக்கப்படுகின்றன என்று அறியப்படுகிறது.(இ)

### திருநெல்வேலி...

மேலும இத்தகைய நடவடிக்கைகள் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுகின்ற செயல் என்றும் படையினர் குறிப்பிட்டனர்.

இந்த நடவடிக்கையால் ஆவேசம் அடைந்த பொதுமக்கள் அவ்விடத்தைவிட்டு வெளியேற முடியாதென்றும் படையினரை வெளியேறுமாறும் கோஷமிட்டனர்.

இதனால் நிலைமை மோசமடைந்து அங்கு பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

இதேவேளை,சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கண்காணிப்புக் குழு அதிகாரிகள் பொது மக்களுடனும் படையினருடனும் பேச்சுகளில் ஈடுபட்டனர்.எனினும் படையினர் கண்காணிப்புக் குழுவினரின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாததை அடுத்து கண்காணிப்புக் குழுவினர் பலாலிப் படைத் தளபதிக்கு சம்பவம் குறித்து விளக்கமளித்தனர்.

இதன்பின்னர் பாலாலி படைத் தளபதியின் உத்தரவுக்கு அமைய படையினர் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

இதனையடுத்து பிற்பகல் 6மணியளவில் லெப்டினன் செல்லக்கிளி அம்மானின் நினைவுத் தூபி திரைநக்கம் செய்து வைக்கப்பட்டது.(இ-4)

### பொங்குதமிழ்...

விளக்கிக் கூறுகையில்;

யுத்தம் நிறுத்தப்பட்டு புரிந்துணர்வு உடன் படிக்கை ஏற்படுத்தப்பட்டு 18 மாதங்கள் கடந்து விட்டன.இந் நிலையில் ஏ-9 யாழ்-கண்டி வீதி திறக்கப்பட்டதைத் தவிர தமிழ் மக்கள் எந்த வித நன்மையையும் இது வரை அடையவில்லை.

இந்த நிலையில் எமது உரிமையைப் பெற்றெடுக்க நாம் அகிம்சை வழியில் போரிட நிர்ப்பந்திக்கப்படுகின்றோம்.இதன் ஒரு வெளிப்பாடே பொங்கு தமிழ் நிகழ்வு.

இதனைத் தவறாகப் புரிந்து கொள்ளும் தென்பகுதி மக்கள் எம்மை அராஜக வாதிகளாக அர்த்தப்படுத்திக் கொள்ள முயல்கின்றனர்.

விடுதலைப் புலிகள் எம்மை இவ்வாறான நிகழ்வுகளை நடத்துமாறு ஒருபோதும் தூண்டியதில்லை. தென்பகுதி அரசியல்வாதிகளை சிங்கள மக்கள் நேசிப்பது போன்றே நாமும விடுதலைப் புலிகளை நேசிக்கின்றோம்.

வடக்குக் கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தப்பட்டு அமைதி நிலை திரும்பாதவிடத்து அகிம்சை வழியில் போரிட்டு எமது உரிமைகளைப் பெறுவது தவிர்க்க முடியாதென்றும் இச்சந்திப்பில் அவர்கள் விளக்கிக் கூறினர்.(இ)

## 1983 இனக்கலவரத்திற்காக சிங்கள அரசியல் சக்திகள் மன்னிப்புக் கோர வேண்டும்


### சிங்களப் பேராசிரியர் தெரிவிப்பு

(லண்டன்)

1983-ல் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறைகளுக்காக சிங்கள அரசியல் சக்திகள் 'தமிழ் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டுமென கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் துறைப்பேராசிரியர் ஜெயதேவ உபயங்கொட தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் லண்டன் பி.பி.சி.தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன வன்முறைகளுக்கு இது வரை எந்த அரசியல் சக்திகளும் மன்னிப்புக் கோரவில்லை.

காலத்தின் கட்டாயத்தின் நிமித்தம் சிங்கள அரசியல் சக்திகள் தமிழ மக்களிடம் நேரடியாக மன்னிப்புக்கோர வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-5)



நேற்று திறந்து வைக்கப்பட்ட லெப்.செல்லக்கிளி அம்மானின் நினைவுத் தூபி

## செல்லக்கிளி அம்மானின் 20-ம் ஆண்டு நினைவு

(யாழ்ப்பாணம்)

லெப்ரினன் செல்லக்கிளி அம்மானின் 20 ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்றிரவு நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில் வீதியில் ஆசிரியர் பத்மராஜா தலைமையில நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக கொடியினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றினார். பொதுச் சுடரினை யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கவியன்பனும், திருவுருவப் படத்திற்கான சுடரினை மாணவர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் மணிவண்ணனும் ஏற்றினர்.அதனைத் தொடர்ந்து பொதுமக்களின் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் நல்லூர்க் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளா பூமகள், பாலகதிர்காம பிரதமகுரு குமாரக் குருக்கள் மற்றும் பலர் உரைநிகழ்த்தினர். (இ-54)

## விபத்தில் மூவர் பலி

(கொழும்பு)

கல்ஹிசை புகையிரத நிலையத்திற்கு அருகில் இடம் பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் இடம் பெற்றது. பாணந்துறையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த புகையிரதத்திற்கான சமிக்ஞை கிடைக்காத போது மாற்றுப் பாதை ஒன்றினூடாகச் செல்ல முயன்ற போதே இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் மேலும் சிலர் காயமடைந்துள்ளனர். (த)

## புகையிரதத் திணைக்களம் அதிகார சபையானது

(கொழும்பு)

புகையிரதத் திணைக்களம் புகையிரத அதிகார சபையாக மாற்றப்பட்டுள்ளது.பாதுகாப்பு அமைச்சரும் போக்குவரத்து அமைச்சருமான திலக்மாரப்பன இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை நேற்று வெளியிட்டுள்ளார்.

புகையிரதத் திணைக்களம் புகையிரத அதிகார சபையாக மாற்றப்பட்டதையடுத்து,புகையிரதத் திணைக்களத்தின் அனைத்துச் சொத்துக்களும் செயற்பாடுகளும் புதிய அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

புகையிரத அதிகார சபை அதன் தலைவர் உட்பட 7அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. அதன் தலைவராக தற்போதைய புகையிரத முகாமைத்துவ சபையின் தலைவர் சட்டத்தரணி ரி.அமரதுங்க கடமையாற்றவுள்ளார்.ஏனைய உறுப்பினர்களின் தெரிவு சில தினங்களில் நடைபெறவுள்ளது. (இ-5)

## படையினருக்கு செயலமர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கு மனிதவுரிமைகள் தொடர்பான செயலமர்வு ஒன்று இவ்வாரம் இடம் பெறவுள்ளது.

மனிதவுரிமை ஆணைக் குழுவினால நடத்தப்படும் இச் செயலமர்வில் 26-ந் திகதி பொலிஸாரும், 27-ம் திகதி இராணுவத்தினரும் பங்கு பற்றவுள்ளனர். (த)

## தமிழக மீனவர்கள் நால்வர் கைது

(இராமேஸ்வரம்)

தமிழகம் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈழத் தமிழ் அகதிகளை படகில் ஏற்றி வந்து இலங்கைக் கடற் பகுதியில் இறக்கிவிட்டு சென்ற பொழுதே இவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு மீனவர்களும் மன்னாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (த)

## யுனெஸ்கோவின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர் பயிலரங்கு

### யாழ்.பல்கலையில் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பத்திரிகைத்துறையில் ஏற்பட்டுளள நவீன வளர்ச்சிகளை அறிமுகப்படுத்தி வளர்ந்து வரும் சமுக விஞ்ஞானச் சுழல்களுக்கு ஏற்ப சிறப்புடன் பத்திரிகைத்துறையில பணியாற்ற உரிய வசதிகளையும் பயிற்சிகளையும் அளிப்பதை நோக்கமாக கொண்டு தமிழ் ஊடகவியலாளார்களுக்கான தொடர் பயிற்சித திட்டத்தை அமுல்படுத்த ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் மற்றும் கலாசாரப் பெருமன்றம் (யுனெஸ்கோ) முடிவு செயதுள்ளது.

இதற்கமைய தமிழ் ஊடகவியலாளர்களுக்கான 12 பயிலரங்குகள் நடைபெறவுள்ளது. இத்தொடர் பயிற்சி நெறியின் முதல் பயிலரங்கு நாளை முதல் 27 ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

தொடக்க விழாவில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க.மோகனதாஸ் யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.இப்பயிலரங்கில் முத்த பத்திரிகையாளர்கள் எழுத்தாளர்கள மற்றும் துறைசார் பேராசிரியர்கள் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்

இதேவேளை பயிலரங்கின் இறுதி நாளில் பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்களை யாழ்.அரசஅதிபர் செ. பத்மநாதன் வழங்கவுள்ளார்.

தமிழ் பத்திரிகைகளின் ஜனநாயக கடமைகளும் சவால்களும் என்ற தொனிப் பொருளில் இடம் பெறும் மேற்படி பயிற்சி நெறியில் யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு,வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 60 பத்திரிகையாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

### இடைக்கால...

புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் டாக்டர் ஹப்ரத் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

எதிர்வரும் இரண்டு வராகாலத்திற்குள் திட்ட வரைபு குறித்து ஆராய்ந்து அதில் மேற் கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக இவ் உபகுழு சிபார்சுகளை முன் வைக்கவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7-ம் திகதி மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் கூடி திட்ட வரைபினால் முஸ்லிம் மக்களுக்கு ஏற்படப் போகும் சாதக பாதக விளைவுகள் குறித்து ஆராயவுள்ளது. (த)

## தமிழர் புனர்வாழ்வுக் கழக வேலைத்திட்டம் ஆரம்பம்

நெக்கொட் நிதியுதவியுடன் யாழ்ப்பாண மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடைமுறைப்படுத்தும் நாவாந்துறை, கொட்டடி பகுதிகளில் 130 வீடுகள் தலா 1 இலட்சத்து 75 ஆயிரம்ரூபா வீதம் புனரமைப்பதற்கான செயற்பாட்டுத் திட்டத்தின் ஆரம்ப விழா கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ்ப்பாண மாவட்ட பணிப்பாளர் சு.ஜெயராஜ் தலமையில் இடம் பெற்றது.

அன்றைய நிகழ்வில் பிரதான சுடரை யாழ்ப்பாணம்,நாவாந்துறை பங்குத்தநதை பீற்றர் துரைரத்தினம் ஏற்றிவைத்தார் தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண அரச அதிபர் செ.பத்மநாதன் விளம்பரப் பலகையை திரை நீக்கம் செய்து வைத்தார்.அதனை தொடர்ந்து பிரதமவிருந்தினர் நெக்கொட் பணிப்பாளர் சாம்பசிவம் யாழ்ப்பாண பிரதேச செயலர் பி. செந்தில்நந்தனன் தமிழர்புனர்வாழ்வுக்கழக யாழ்ப்பாண மாவட்ட பணிப்பாளர் ஆகியோர்வீட்டுக்கான ஆரம்ப கட்டு வேலையை ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து யாழ்ப்பாண அரச அதிபர் செ.பத்மநாதன் தனது சிறப்புரையில் இவ்வேலைத்திட்டம் நெக்கொட் நிதிஉதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவது மிகவும் பொருத்தமானது.எதிர்வரும் மழைக்காலத்திற்கு முன் இவ்வேலையை தமிழர் புனர்வாழ்வு கழகம் முடித்து தரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக நல்லாயன் கன்னியர் மடத் தலைவி சகாயமேரி,தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்று பணிப்பாளர் சி.இனியவன் ஆகியோர் கலந்து கொண்டனர்

தொடர்ந்து விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண மாவட்ட அரசியல் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கனிமொழி சிறப்புரை வழங்கினார்.

இறுதியாக பயனாளிகளுள் ஒருவரான ம.பவுலிஸின் நன்றியுரையுடன் விழா முடிவுற்றது. (உ)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில்24.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.